www.tamilarangam.net

# கதிர்

20 மாசி 1991
அரசியல் இதழ்: 05
அன்பளிப்பு: 5,-DM.

வளைகுடாயுத்தம்

## அமெரிக்க ஆதிக்கத்தின் பரீட்சைக் களம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதிர்

"மெல்லெனப் பாயும் ஓடை
கல்லையும் உருட்டிப் பாயும்."

20 மாசி 1991

**அரசியல் இதழ்:** 05

**அன்பளிப்பு** 5,-DM.

வளைகுடா யுத்தத்தின் சப்தங்களையும் மீறி இலங்கையின் வடகிழக்கில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் இராணுவ வன்முறைகள் உலக அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முழுமூச்சான போரில் ஈடுபட்டிருக்கும். இலங்கை அரசு இந்திய இராணுவத்தின் கடந்த இருவருட கால முயற்சிகளையும் ஜே.வி.பி. அழிப்பின் மூலம் இராணுவம் கொண்ட மனோ திடத்தையும் அனுபவங்களாகக் கொண்டு செயற்படத் தொடங்கியுள்ளது. இந்திய இராணுவம் இலங்கையில் சுமார் ஒன்றரை இலட்சம் துருப்புக்களை தரை இறக்கி வடகிழக்கின் மூலை முடுக்குகளில் எல்லாம் ரோந்து புரிந்து வந்திருந்தது. இதனாலேயே விடுதலைப்புலிகள் நடமாடமுடியாது நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டதாகவும் அதனாலேயே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை ஒன்றிற்கு நிபந்தனையின்றி முன்வந்ததாகவும் இலங்கை இராணுவம் உய்த்தறிந்துள்ளது. அதேவேளை ஜே.வி.பி.யின் தலைமைப் பீடத்தை ஒழித்துக்கட்டியது போல் முடிந்தால் அவ்வாறும் செய்து விட தயாராக உள்ளது.

ராஜீவ் தலைமையிலான இந்திரா காங்கிரவின் முற்றுகையில் இயங்கிக் கொண்டிருக்கும் சந்திரசேகர் தலைமையிலான இன்றைய பாரத அரசு இந்திய இராணுவம் வடகிழக்கில் இருந்த போது இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் கையாண்ட உத்திகளையே சந்தர்ப்பம் வரும்போது கையாள்வதற்கு நாட்டமுடையாதாய் உள்ளது.

இவ்வாறு இரு அரசுகளாலும் தமது சொந்த நலன்களை நிலைநாட்டுவதற்காக வடகிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் சதுரங்கங்கள் இன்னமும் தொடர்வதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்கு அரசியற் தீர்வு தேடி விவாதங்களும் திட்டத் தயாரிப்புக்களும் வழமைபோல் கொழும்பில் இடம் பெற்று வருகின்றன. அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தம் பற்றி, வடகிழக்கு மாகாண நிரந்தர இணைப்புப் பற்றி, அதற்கான அதிகாரங்கள் பற்றி மீண்டும் மீண்டும் கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியிருக்கும் வடகிழக்கு மக்களுக்கு இப்போது இக்கோஷங்கள் எரிச்சல் ஊட்டுவதாக உள்ளன. வடகிழக்கில் காலாகாலமாக இராணுவக் கெடுபிடிக்குள்ளாகி வரும் இம்மக்களுக்கு உடனடியாக வேண்டியதெல்லாம் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக்கூடியதான ஒரு பிராந்திய அங்கீகாரமும் அதன் எல்லைக்குட்பட்ட தனித்துவமான பாதுகாப்பு ஏற்பாடுமேயாகும். பேச்சுவார்த்தைகள் எதுவும் இதனை ஈடுசெய்யக்கூடியதாக அமையப்பெற்றாலேயே வடகிழக்கில் ஏற்படக்கூடிய எந்த வகை அரசியல் முடிவுகளுக்கும் அர்த்தம் ஏற்பட முடியும். ●

முகவரி:

KATHIR
POSTFACH 61 04 94
1000 BERLIN 61
GERMANY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### வடபகுதி மீதான தாக்குதல்கள்

# ஆறு மாதங்கள் வரை தொடருமென அறிவிப்பு!

## முதற்கட்டமாக வன்னிப்பகுதியில் நிலைகொள்ள இராணுவ தரப்பு முயற்சி!

இலங்கை அரசு தனது சகல இராணுவ வளங்களையும் ஒன்று திரட்டி வட பகுதியல் முழு மூச்சான மோதல்களில் இறங்கியுள்ளது. கடந்த ஆண்டு இறுதி முதல் படிப்படியாக தனது இராணுவ பலத்தை அதிகரித்துக் கொண்ட இலங்கை அரசு இந்த மோதல்களை இறுதி மோதல்கள் எனவும் ஆறுமாதம் வரை நீடிக்கும் எனவும் கூறியுள்ளது. விடுதலைப்புலிகளின் இராணுவ பலத்தை இக்காலகட்டத்தில் நிர்மூலமாக்கி விடமுடியும் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் காலவரையறையற்ற யுத்தநிறுத்தத்தை தாம் கடைப்பிடிக்கப் போவதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருந்த போது அவர்களின் உள்நோக்கங்களை அறிந்து கொள்வதற்காக இலங்கை அரசு ஒருவாரகாலம் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பதாக கூறியது. இக்கால கட்டத்தில் பலதடவைகள் கொழும்பில் கூடிய இராணுவ அதிகாரிகளின் கூட்டத்தில் விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கை அலசி ஆராயப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை கருத்திற் கொண்டு அங்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் இலங்கை அரசின் போலித்தனங்களை வெளிக்கொண்டு வரவும் தாம் யுத்தநிறுத்தை அறிவித்துள்ளதாக விடுதலைப்புலிகள் விளக்கமளித்திருந்தனர். இது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் பலவீனமடைந்திருப்பதை எடுத்துக்காட்டுவதாகவும் யுத்தநிறுத்த அவகாசத்தைப் பயன்படுத்தி தம்மை புனரமைத்துக் கொள்வதை உள்நோக்கமாக கொண்டிருப்பதாகவும் இலங்கை அரசின் இராணுவ அதிகாரிகள் தமக்குள் முடிவு செய்தனர். இதனால் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடித்து காலம் போக்காது கிழக்கு மாகாணத்தைப் போல் வடபகுதியையும் மீட்டு விடவேண்டுமென தீர்மானித்தனர்.

தற்போது இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் யாவும் முதற்கட்டமாக வன்னிப்பகுதியை விடுவிப்பதையே நோக்கமாக அமையப் பெற்றுள்ளன. இந்திய அரசின் இன்றைய நிலைப்பாடும் மேற்குலக நாடுகள் வளைகுடா யுத்தத்தில் மூழ்கிப்போயுள்ள நிலையும் இலங்கை அரசுக்கு சாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. தட்டிக்கேட்க ஆளற்ற நிலையில் தனது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

## அமைச்சர் சுக்ளாவின் இலங்கை விஜயம் இலங்கை-இந்திய உறவுகளை சீராக்கியுள்ளதா?

வடகிழக்கு மோதல்களை அவதானித்து வந்த இந்திய அரசு தனது வெளிவிவகார அமைச்சர் சுக்ளாவின் இலங்கை விஜயத்தினுடன் இலங்கை பிரச்சனை மீது கடந்த ஆண்டுகளில் இழந்து போயிருந்த தமது முக்கியத்துவத்தை மீட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைக்கு ஜனவரி 28ம் திகதி விஜயம் செய்த இந்திய வெளிநாட்டமைச்சர் சுக்ளா கடந்த சில வருடங்களாக நலிவடைந்திருந்த இலங்கை இந்திய உறவை கணிசமானளவு சீராக்கியுளார் என்ற கருத்து கொழும்பு வட்டாரங்களில் நிலவுகின்றது.

பொருளாதார மற்றும் சமூக உதவிகள் குறித்தும் இலங்கை இனப்பிரச்னை பற்றியும் இவர் இலங்கை அரசுடனும் விடுதலை இயக்கங்களுடனும் தனித்தனியே பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளார். மன்னாரில் எண்ணெய் வள ஆய்வை மேற்கொள்வதற்கு வேண்டிய தொழில் நுட்ப உதவிகளையும் நிதி உதவிகளையும் இலங்கைக்கு இந்தியா வழங்க ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. மேலும் தேயிலைவிலையை நிர்ணயிப்பதில் இரு அரசுகளும் கூட்டாக செயற்படவும் உடன்பாடு காணப்பட்டுள்ளது. மலையக தமிழ் இளைஞர்களுக்கான கல்வி, ஆசிரியர் பயிற்சி வசதிகளை வழங்கவும் இந்தியா முன்வந்துள்ளது. இவ்விவகாரங்கள் இலங்கை அரசதரப்பில் வரவேற்பைப் பெற்றுள்ளன.

அதேவேளை இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான அமைச்சர் சுக்ளாவின் அணுகுமுறைகள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள சுமார் இரண்டு இலட்சம் அகதிகளை மீள அனுப்பிவைக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹேரத் அமைச்சர் சுக்ளாவைக் கேட்டுக்கொண்ட போது வடகிழக்கில் அமைதி ஏற்படும் போதே அவர்கள் நாடு திரும்பும் சூழ்நிலை ஏற்படுமென பதிலளித்துள்ளார். இத்துடன் வடகிழக்கில் இரு தரப்பும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இவர் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய விடுதலை இயக்கங்களுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் கொழும்பில் பேச்சுவார்த்தையை நடாத்தியிருந்தார்.

www.tamilarangam.net

இந்நிகழ்ச்சியானது இந்திய அரசு மீண்டும் தனது நேரடித்தலையீட்டை நிலைநிறுத்தியுள்ளமைக்கு சான்றாக அமைந்துள்ளது. இந்திய அமைச்சரின் இந்த அணுகுமுறை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அதிருப்தி அலைகளைத் தோற்றுவித்துள்ளன.

இலங்கை இனப்பிரச்சனை விவகாரம் இந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு அரசை கலைக்குமளவிற்கு முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது. இந்தியாவின் இன்றைய மத்திய அரசிற்கும் கலைஞர் மு.கருணாநிதிக்கும் இடையே பல முரண்பாடுகள் நிலவி வந்த போதும் கலைஞரின் ஆட்சிக் கலைப்பிற்கு விடுதலைப்புலிகளுக்கு அவர் கொடுத்து வந்த ஆதரவையே முதற்தரக் காரணமாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான விடுதலைப்புலிகளின் உபாயத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரசுடன் ஐக்கியத்தை பேணி மத்திய அரசின் நிர்ப்பந்தங்களை எதிர்கொள்ளும் உத்திகளையே எப்போதும் இடம் பெற்று வந்துள்ளன.

தமிழக ஆட்சிக்கலைப்பு, இந்திரா காங்கிரஸ் உடன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை கூட்டுச் சேர்த்த ஆட்சியொன்றினை தமிழகத்தில் ஏற்படுத்துவதையே நோக்கமாக உடையது என்பது வெளிபடையானது. வடகிழக்கில் நடைபெற்று வரும் மோதல்களின் போது பலவீனமடையும் விடுதலைப்புலிகள் மீண்டும் இந்தியாவின் துணையை நாடும் போது முன்னர் போலல்லாது முன்நிபந்தனைகளுடன் அவர்களைக் கையாள ஒரு ஆட்சி மாற்றம் அவசியமென்பது மத்திய அரச அதிகாரிகளின் அனுமானமாகும்.

இந்தவகையில் தமிழக ஆட்சி மாற்றம் இலங்கையின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கும் ஓர் அம்சமாக முக்கியத்துவம் பெற்று நிற்கிறது.

## தமிழ்-முஸ்லிம் அமைப்புகளும் கட்சிகளும் ஆராய்ந்து வரும் புதிய யோசனைகள்

இலங்கை ஜனாதிபதி சில மாதங்களுக்கு முன்னர் அனைத்து விடுதலை இயக்கங்களுக்கும் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தமிழ் முஸ்லீம் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பொதுத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சிகளில் இறங்கியிருந்தன. இவை முற்றுப் பெறாதபோதும் சில அம்சங்களில் இணக்கம் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதையும், வடகிழக்கை நிரந்தரமாக இணைப்பதையும் ஒரு மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு இல்லாதொழிப்பதையும் மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களைக் கூட்டுவதையும் முஸ்லிம்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதையும் முன்வைத்து தற்போதைய இனப்பிரச்சனைக்கான அரசியற் தீர்வை காண்பதில் சிரத்தை எடுத்து வருகின்றனர்.

ஆயினும் வடகிழக்கில் யுத்தமுனையில் இருக்கும் இலங்கை அரசுக்கு இந்த யோசனைகளைப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இப்போது இல்லை.

## அரசியலில் இருந்து ஒதுங்கி வாழப்போவதாக பாலகுமாரன் கடிதம்



கடந்த வருடம் யூலை மாதமளவில் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறிய ஈரோஸ் மீண்டும் பாராளுமன்றம் செல்வதற்கு தயாராகியிருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது. மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகு தாவூத் இதற்கு அடையாளமாக பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் என்ற கோரிக்கையின் கீழ் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியவர்கள் இன்றைய காலகட்டத்தில் தமது அமைப்பு உள்ளேயும் வெளியேயும் சந்தித்து வரும் நெருக்கடிகளை முகம் கொடுப்பதற்காக இதைச் செய்ய வேண்டியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இவ்வியக்கம் விடுதலைப் புலிகளுடன் கொண்டுள்ள உறவில் முறிவுகளைச் சந்திருப்பதனால் அதன் எதிர்காலம் குறித்து திட்டவட்டமான முடிவுகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் 30 உறுப்பினர்களைக் கொண்ட தீர்மானம் இயற்றும் பொதுக்குழுவிற்கு அவ்வியக்கத்தின் நிறைவேற்றுச் செயலாளரும் பேச்சாளருமான பாலகுமாரன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தை ஆதாரமாக வைத்து அதன் எதிர்காலத்தை தீர்மானிக்க உள்ளனர். விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்காக மேற்கொள்ளப் பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளதை இக்கடிதம் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அனைத்து அரசியல் வாழ்விலிருந்தும் பாலகுமாரன் இனிமேல் ஒதுங்கி தனிவாழ்வு வாழப்போவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஈரோஸ் இயக்கம் இனிவரும் காலங்களில் புதிய சிந்தனைகளைத் தாங்கி துணிவுடனும் பலமுடனும் செயற்பட வேண்டுமெனவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எழுபதுகளில் ஈழவிடுதலை இயக்கத்தின் ஆதரவாளராக செயற்பட்டு வந்த பாலகுமாரன் 1977ல் ஈரோஸ் இயக்கத்தில் இணைந்து செயற்படத் தொடங்கியிருந்தார்.

இயக்கப் பணிகளின் நிமித்தம் 1982ல் இவர் சென்னைக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தார். அக்காலங்களில் பலமுகாம்களாக சிதறியிருந்த விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து செயற்பட வேண்டுமென்ற கருத்தின் கீழ் ஈரோஸ் செயற்பட்ட போது இவர் மாற்று இயக்கங்களின் தலைவர்களுடன் பலதடவைகள் சந்திப்புகளைநடாத்திவந்தார். அக்காலகட்டங்களிலேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருந்தது. இதுவே இவ்விருவரது நட்பின் ஆரம்பமுமாகும்.

1983ல் இலங்கையில் இடம் பெற்ற வன்முறைகளைப் பயன்படுத்தி இந்தியா இலங்கை விவகாரம் மீது கடைப்பிடிக்க முனைந்த அணுகுமுறைகளை கருத்திற் கொண்டு மீண்டும் இலங்கை திரும்பியிருந்தார். அக்காலங்களில் தேக்க நிலையை அடைந்திருந்த ஈரோஸ் இயக்கத்தை புனரமைத்து செயற்பட வைப்பதில் ஆர்வம் காட்டியிருந்தார்.

1984ல் ஈரோஸ் மேற்கொண்ட புனரமைப்பு நடவடிக்கைகளின் போது அவ்வியக்கத்தின்

www.tamilarangam.net

பொதுக்குழுவின் முடிவுகளை நிறைவேற்றும் அதிகாரமுடைய நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களில் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இயக்கங்களிடையே நிலவும் முரண்பாடுகளைப் போக்கி ஐக்கியத்தை உருவாக்கும் முயற்சிகளில் இவர் ஈடுபடலானார்.

1984-85 காலகட்டங்களில் ஈழத்தேசிய விடுதலை முண்னணி என்ற பொதுப்பெயரின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்த ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகிய இயக்கங்களின் தலைவர்களால் இத்தேசிய முண்ணனியின் பிரதம பேச்சாளராக பாலகுமாரன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். இதன் பின்பே பாலகுமாரன் அரசியல் பிரமுகராக அரசியல் அரங்கில் சித்தரிக்கப்பட்டார். இவரது ஆடம்பரமற்ற எளிமையான குணாம்சங்கள் இந்திய பத்திரிகையாளர்கள் மத்தியில் மிகுந்த ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதன் பின்பு 1986ம் ஆண்டு ரெலோ-புலிகள் மோதல் ஏற்படும் வரை ஈழத்தேசிய விடுதலை முண்ணனியின் பேச்சாளராக இவர் விளங்கிவந்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் யாழ்நகர் திரும்பிய பாலகுமாரன் 1988ம் ஆண்டில் மிருசுவிலில் நடைபெற்ற அவ்வியக்கத்தின் உறுப்பினர்களுக்கான மாநாட்டில் 30 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நிறைவேற்றுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். விடுதலை இயக்கங்களிடையே போட்டியும் படுகொலைகளும் தலைவிரித்தாடிய சூழ்நிலைகளில் ஈரோஸ் இயக்கத்தை மாற்று இயக்கங்களுடன் மோதல்களுக்கு இட்டுச் செல்லாத முறையில் சமசரப் பேச்சுவார்த்தைகள் மூலம் காப்பாற்றிக் கொள்வதே இவரது பிரதான பணியாக அமையப்பெற்றிருந்தது.

இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கிய போது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கொழும்பில் கூடிய ஈரோஸின் பொதுக்குழு பாலகுமாரனின் தலைமையில் ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தீர்மானித்திருந்தது.

கடந்த ஆறு மாதகாலமாக விடுதலைப் புலிகளுடன் பாலகுமாரன் நடாத்தி வந்த பேச்சுவார்த்தைகள் யாவும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாகவும் இன்றைய சூழ்நிலை காரணமாக தான் அரசியலிலிருந்து ஒதுங்கி வாழப்போவதாகவும் பொதுக்குழுவிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். பாலகுமாரனின் கடிதத்தை ஆதாரமாக வைத்து பொதுக்குழு உறுப்பினர்கள் ஈரோஸ் அமைப்பின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போவதாகக் கூறியுள்ளனர். ●

# விடியல் ஒரு தேடல் மட்டுமே!

மரணங்களே
இந்த
அகோர மரணங்களால்
மனமுருகி
கண்ணீர் உதிர்க்கின்றன...!

மனிதாபிமானங்கள்
துப்பாக்கிகளால்
தூர தேசங்களுக்கு
துரத்தப்பட்டு விட்டன...!

எமனும்
பிணத்தை காண சகிக்காது
கண்களை மூடித்தான்
கயிற்றை
பாய்ச்சுகிறானோ?

வார்த்தைகள்
தொண்டைக்குள்
வழி மறியல்
செய்கின்றன..
வெளியே போக
அனுமதிக்காதே
அவர்கள்
மண்டையில் போட்டு
விடுவார்களாம்...!

விநோதங்களே
விழியுயர்த்தி,
நாடியில் கைவைத்து
அதிசயித்துக் கொள்கின்றன..
'தனயன் தலையை
தந்தை
கிசு கிசு பையில்
சுமப்பதை' பார்த்து....!

தன்மானங்கள்
இங்கு
ஆண்பனையில்
நுங்குகள்...!

இவ்வதிசய ஆதிக்கத்தை
பேணுவது,
சூடேற்றப்பட்ட மின்னழுத்தி
கொலைகளே....!

போராட்டம்...,
தற்கட்சி பெருமை,
வெறும்
'ஆஹோ ஓஹோ'களால்
நிர்வாணப்பட்டுக்
கொண்டிருக்கின்றது...

சிந்தனைகள்
சிதறி
சித்தத்தையே
குழப்புகிறது
'நாம் சிங்களனிடம்
சரண் புகுவதா...!
தமிழனிடம்
சரண்புகுவதா...! என்று..'

ஆக..!
விடியல் என்பது
எம்மக்களின்
வெறும்
தேடல் மட்டுமே...
இது
யானையின் வால்
பிடித்து
சொர்க்கம்
சென்ற கதை தான்.....!

**-என்.மதியழகன்-**
**(சுவிற்சலாந்து)**

●

www.tamilarangam.net

சுடர்மிகு அறிவு:

# இன்றைய தமிழ் இளைஞர்கள் கல்விவாய்ப்புக்களை இழந்துவருகின்றனர்.

பரிஸிலிருந்து பற்றிமாறன்

"நல்லதோர் வீணை செய்தே- அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி- சுடர்மிகு அறிவுடன்
எனைப் படைத்து விட்டாய்....."

*தமிழ்க் கவிஞனான பாரதி அன்று சுட்டிக்காட்டிய அழகான படிமம் இன்றும் மீட்கப்படவேண்டிய ஒன்றாய் போயுள்ளது. நல்லதோர் வீணை புழுதி மூடிக்கிடக்கிறது. சிந்திக்கும் சக்தி படைத்த எவனும் இன்றைய சமுதாய அலங்கோலங்களைத் தாங்கமாட்டான் என்பது திண்ணம்.*

நமது மண்ணில் ஆட்சி புரிந்த வெள்ளையர்கள் தமக்கேற்ற கல்வி முறையை - அதாவது தமது முதலாளித்துவச் சந்தைக்கு நிர்வாகப் பங்களிப்பை மேற்கொள்ளக்கூடிய மனித சக்தியை உருவாக்கும் கல்வி முறையை எமது மண்ணில் திணித்து எமது சமுதாய விழுமியங்கயையே மாற்றியமைத்தனர்.

டாக்டர்..என்ஜினியர் அதுவும் கைநழுவிவிட்டால் ஆகக்குறைந்தது ஒரு விஞ்ஞான இளநிலைப்பட்டமாவது தமது பிள்ளைகளுக்கு கிட்டவேண்டுமென்பது 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நமது சமுதாயப் பெற்றோர்களின் இலக்காக மாறியது. இந்த எதிர்பார்ப்புக்கேற்ப பெண் அடிமைத்தனச் சிந்தனையும் விரிவுபெற்று சீதனத் தொகையை விஞ்ஞான- சட்டக் கல்வி கற்றோர் அதிகமாக கேட்கவும்- வழங்கவும் தொடங்கினர். இந்த இளநிலைப் பட்டத்தை அடைந்ததுமே அவர்களை சமுதாயத்தின் சிந்தனைச் சிற்பிகளாகக் கருதும் ஒரு போக்கும் தொடங்கியது.

இந்த அறிவியல் வழியில் தோன்றிய சமூக முரண்பாட்டின் போக்கினை மாற்றியமைத்து இலங்கைப் பல்கலைகழகங்களில் புதிய விழிப்புணர்வைத் தோற்றுவித்த பெருமை கலாநிதி. கைலாசபதி அவர்களுக்கும் கலாநிதி. சிவத்தம்பி, கலாநிதி. இந்திரபாலா போன்றோர்க்கும் உண்டு. அதே காலத்தில் இவர்களுடன் கூட்டாக இயங்கி வந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் அறிவுத் துறையைப் பயன்படுத்தி இரு கூறுபட்ட சமூகத்தன்மையைத் தமிழரிடையே தோற்றுவிக்கும் போக்கைக் கடுமையாகச் சாடினர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இடதுசாரிக்கட்சிகள் இக்காலகட்டத்தில் ஏற்படுத்திய கூட்டானது, சிங்களப் பேரினவாதத்தின் போக்கை மாற்றாவிட்டாலும் கூட புத்திஜீவிகளிடையே இலங்கைக் கல்வி-தொழில் அமைப்புக்களில் பிரிட்டிஷ் முதலாளித்துவம் ஏற்படுத்திய போக்கை மாற்றவேண்டும் "புதிய கல்விமுறையைத் தோற்றுவிக்கவேண்டும்" என்ற தீர்க்கமான எண்ணத்தை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வி முறையால் ஆங்கிலம் கற்றவர்களின் வாரிசுகளே வரன் முறையாக சமூக உயர்நிலையை அடையமுடியும் என்ற போக்கை தடுக்கவேண்டும் என்ற பண்பாட்டு மீட்டுணர்வும் தோற்றுவிக்கப்பட்டது. தொழிற்கல்வியில் துரித வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக்காலகட்டத்திலே இந்திய "மசாலா" படைப்புக்கள் தமிழ் இலக்கிய- தமிழ்த்திரை உலகினூடாக இலங்கைத் தமிழ் மக்களின் சிந்தனைகளை மழுங்கடிக்கச் செய்கின்றன என்ற கோஷத்துடன் இத்தகைய மசாலா நூல்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு முறைகளும் வேண்டப்பட்டன.

அதேவேளை பல்கலைக்கழக அமைப்பானது ஒன்று குவிந்த தன்மையைக் கொண்டிருந்து, அவை பேராதனை- கொழும்பு பல்கலைகழகங்களில் மட்டும் கற்கை நெறிகள் செறிவுபடுத்தப்பட்டமையால் பிரதேச அறிவு வளர்ச்சியில் பின்தங்கிய நிலைமை ஏற்பட்டிருந்ததை உணர்ந்து பல்கலைக்கழகப் பரவலாக்கம் என்ற உணர்வு தூண்டப்பட்டது. இதன் விளைவாகவே யாழ்ப்பாண- மாத்தறை- களனிப் பல்கலைக்கழகங்கள் என்ற சுயாட்சி பல்கலைக்கழகங்கள் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டன.

## சிங்களப்பேரினவாதம் புதிய சிந்தனைகளை சிதைத்தது.

இவ்வாறு புதிய சிந்தனைகளுக்கும், அறிவுப் பரவலாக்கத்திற்கும் வழிகோல பலரும் முயற்சித்த போதிலும் இலங்கை அரசியல் தலைமைத்துவத்தில் வேரூன்றி நின்ற சிங்களப் பேரினவாத உணர்வும் முதலாளித்துவ சக்திகளும், இக்கல்வி தொழில் சார் சீர்திருத்தங்களை முடமாக்கி மேலும் மேலும் சிங்களப் பேரினவாத முதலாளித்துவ அமைப்பையே உறுதி செய்தன.

இவை இலங்கையில் 70களில் சிங்களவர்மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் "பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியின் இயலாமைகளை" புத்திஜீவிகள் மட்டத்தில் உணர்த்தின என்பது மறுக்கமுடியாத உண்மை. இதுவே ஜனநாயக வழிமுறைகளைக் கைவிட்டு ஆயுதப்புரட்சி ஊடாகவே இலங்கையின் அரசியல் தலைமைத்துவக் குறைபாடுகள் களையப்படவேண்டுமென்ற உணர்வை இளைய சமுதாயத்திடம் ஆழமாகப் பதித்தது. அதேவேளை சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சி நிலையால் தமிழ் இளைய சமுதாயம் தன்னை பூரண இறைமையுள்ள இனமாக விடுவிக்க மேற்கொண்ட முயற்சிகள் அறிவார்ந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இலங்கைத் தமிழ்மக்களிடையே ஆயுதப் போராட்ட யுகம் 70ன் நடுப்பகுதிகளின் பின் கருவுற்று 80ன் ஆரம்பங்களின் வளர்ச்சியுற்று 80ன் நடுப்பகுதிகளில் உச்சக் கட்டத்தை அடைந்து 80ன் பிற்பகுதிகளில் புதிய பரிணாமங்களைப் பெற்றுள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்காலகட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் அறிவு சார் வளர்ச்சியை ஆராயும் பொழுது கடந்த பத்தாண்டுகளில் உருவான இளைய சமுதாயம் மரபுசார் கல்வி நிலையில் வேரூன்றாத சமுதாயமாகவே காணப்படுகிறது. பெருந்தொகையான இளைஞர்கள் தமிழ்ப்பிரதேசங்கங்களில் இருந்து இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

## ஐரோப்பாவில் வாழும் இளைஞர்களின் கல்வி

முதலில் ஐரோப்பாவுக்கு வந்த தமிழ் இளைஞர்களின் அறிவு வளர்ச்சி நிலையினை மரபுசார் முறையில் நோக்கின் அவர்கள் ஐரோப்பாவின் முதலாளித்துவ சந்தையின் அடிமட்டத் தேவையினைப் பூர்த்தி செய்யும் மனிதக் கூலிகளாகவே காணப்படுகின்றனர். எவ்வாறு ஒரு இயந்திரம் உற்பத்திக் காரணியாக உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறதோ அவ்வாறே இவர்கள் உருமாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வகையில் பரினை மையமாகக் கொண்டு நோக்குகையில் "கூட்டுதல் - கழுவுதல்" என்று சுருக்கமாகக் கூறப்படும் இருதுறைகளிலேயே மிகப்பெரும் பான்மையான தமிழ் இளைஞர்கள் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர். இலங்கையில் உயர்கல்வி பெற்று இங்கு வந்தவர்கள் கூட தொடர்புகட்கு மொழி தடையாக இருப்பதால் தங்கள் நாளாந்த வாழ்வைக் கொண்டு செல்ல இந்த இருதுறைகளிலேயே வேலையைத் தேட வேண்டியவர்களாக உள்ளனர்.

மேலும் இவ்வாறு வேலையைத் தேடிக் கொள்பவர்கள் தாம் ஐரோப்பாவுக்கு வருவதற்கு பட்ட கடன்களை அடைப்பதற்கும் ஈழத்தில் மனிதப் புழுக்களாகத் துடிக்கும் தமது உற்றாரை பெற்றாரை காப்பாற்றப் பணம் அனுப்புவதற்கும் தம்மை ஒரு இயந்திரமாக மாற்றி ஒரு நாளைக்கு 16 மணி நேரம் உழைக்கின்றனர். இது முதலாளித்துவ அமைப்பின் உற்பத்திப் பெருக்கத்திற்கு உகந்ததாய் உள்ளதால் இலங்கைத் தமிழர்க்கு நல்ல வரவேற்பைத் தொழில் முதல்வர்கள் வழங்குகின்றனர்.

இதனால் தமிழ் இளைய சமுதாயம் தனது அறிவுசார் வளர்ச்சியை இழந்து மூளைப்பலத்தை இழக்கிறது என்பது வேதனை கலந்த உண்மை. குடும்பஸ்தர்களாக வாழ்பவர்கள் தமது பிள்ளைகளை "ஊரோடுகையில் ஒத்தோடு" என பிரான்சிய சமுதாயத்தின் உறுப்பினர்களாக மாற்றுவதையே இலக்காகக் கொண்டு வாழ்கின்றனரே தவிர தமது இனமொழிக் கலாச்சாரத்தைப் பேண மனஉறுதி யற்றவர்களாகவே காணப் படுகின்றனர்.

மேலும் முதலாளித்துவ அமைப்பின் மற்றொரு சிறப்புத்தன்மை மனிதனை




## மந்தமானவரா ? ஈனப்பிறவியா?

எந்தவொரு சமுதாயத்தினதும் சௌக்கியத்தை உயிர்நாடி போல் தெரிவித்துக் கொண்டிருப்பதற்கென அங்கே சில தொழிற்துறைகளும் இருக்கும். அவற்றுக்கெல்லாம் வைத்தியத்துறை தலை தூக்கி நிற்கும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. இதனை ஒரு தொழிற்துறை, வேலைவாய்ப்பு என்பதிலும் பார்க்க தார்மீக தொண்டென வர்ணிப்பவர்களும் வார்த்தைக்கேற்ப கருமமாற்றுபவர்களும் நிறைந்த வெள்ளையர் சமுதாயங்களிடையே வாழும் நாம் உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. என்போல் எதனையும் கற்றறியாது கற்பனை கொண்டவர் பலர் "டாக்டர்களாக வந்திருந்தால் பிரயோசனமாக இருந்திருக்கும்" என சிலவேளைகளில் ஏங்குவதும் உண்டு. ஆனால் எமது டாக்டர்களில் பலரின் தார்மீக உணர்வுகள்தான் கேவலமானதாகப் போகட்டும், குறைந்தபட்சம் professionalism ஆவது, அதாவது தேர்ந்தெடுத்த தொழிற்துறை மீதான முற்றுமுழுவதான commitment, இருக்கிறதா என்பதே கேள்விக் குறியாயிருக்கிறது.

வசந்தமாளிகை போல் இங்கே ஒரு வீடு. ஞாயிறுகள் மத்திய போசனத்துடன் அரசியலுக்கென ஒதுக்கப்பட்டு "பொக்குவாய்" பொலிற்றிக்ஸ் கதைக்கப்படும் இடம். அங்கே அண்மையில் கூடியவர்களில் ஏகப்பட்டோர் டாக்டர்கள் என்பதை எனது பீடிகையிலிருந்தே உணர்ந்திருப்பீர்கள். அன்று அவுஸ்திரேலியாவில் இருந்து holiday இல் வந்த தமிழ் டாக்டருக்கு கௌரவிப்பு. வழமை போல ஆங்கிலத்தில்தான் உரையாடல்.

"recent சண்டையில பொம்மிங்களுக்குப் பிறகு ஆஸ்பத்திரிகளுக்கு வந்து சேர்ந்த காயமுற்றோர் தொகையை அங்கிருக்கும் ஒரு சில டாக்டர்களால் சமாளிக்கவே முடியவில்லையாம்! பெடியளுக்குக் கூட வைத்தியம் செய்யாமல் வாட் வளிய நோவுகளோட பரிதவிப்பாம்! நாங்கள் இங்கை கதைக்கிறம். அங்கை இருக்கிற இந்த இரண்டொரு டாக்டர்மாரையும் யோசித்துப் பார்க்க வேணும்!." அவுஸ்திரேலியாவிலிருந்து வந்தவர் தனது சகலனாரின் தமிழீழ விஜய அனுபவங்களை தனதாக்கித் தந்தவண்ணமிருந்தார்.

வீட்டுக்கார டாக்டருக்கு இவர் கூறுவது பிடிக்கவே இல்லை. அவர் தொழில் உணர்வை உறுத்தியதோ. அரசியல் சார்புகள் உந்தியதோ. "நீங்கள் அப்பிடிச் சொல்கிறீர்கள். நான் வேறுவிதமாதக் கேள்விப்படுறன். அங்கை படிச்சு சேர்டிபிக்கட்டோடை இருக்கிற டாக்டர்கள் குறைவானாலும், சின்னப் பெடியள் இப்ப எல்லா operation களும் செய்வாங்களாம்.!" என்றார் மிகவும் கண்டிப்புடன்.

"நீங்கள் உப்பிடி சொல்லிக் கொண்டிருங்கோ. அங்கை சனம் அழிஞ்சு கொண்டே போகுது. தப்பிறதுகள் காசிருந்தா கொழும்பிலை வந்து குவியுது. முந்தி தமிழீழம் கேட்கிறபோது கொழும்பிலை இருப்பவங்களின்ரை கதையை விடுங்கோ. அவங்கள் கொழும்புத் தமிழர் எண்டு தட்டிக் கழிச்ச மாதிரி இப்பவும் சொல்லேலாது...." அவுஸ்திரேலிய டாக்டர் வீட்டுக்காரரை எதிர்த்தார்.

வீட்டுக்காரர் முட்டுக்கட்டை போடுவது போல் "நீங்கள் இப்ப என்னத்தை சொல்ல வாறீங்கள் ?" என்றார்.

www.tamilarangam.net

தொழில் நுட்பத்திற்கு அடிமை யாக்குவது என்பர். தொலைக் காட்சிப் பெட்டிகள், வாகனங்கள் நாளாந்த வாழ்வில் இயந்திர உபயோகத்தைப் பெருக்கல் என்பவற்றையே ஐரோப்பா வாழ் தமிழ் இளை சமுதாயமும் தனது பிரியமாக கொண்டு திகழ்கிறது.

பரிணை நோக்கினும் ஒட்டுமொத்தமாக ஐரோப்பாவை எடுத்துக்கொண்டாலும் இலங்கைத் தமிழர்கள் மனதில் ஒருவகை யான Escapism (தப்பியோடல்) மனப்பான்மை காணப்படுகிறது. இலங்கைத்தமிழர் என்று சொல்வதை, இலங்கைத் தமிழருடன் சேர்வதைத் தவிர்த்து தமது இனச்சான்றைக் கூட மறக்க, மாற்றத் துடிக்கின்றனர். இந்நிலையில் ஐரோப்பா வாழ் தமிழ் இளைய சமுதாயம் "சுடர் மிகு அறிவைப்" பெறுமா என்பது பெரும்கேள்விக் குறியே.

## தமிழ் நாட்டில் தவிக்கும் தமிழ் இளைஞர்கள்.

இனி இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழும் ஒன்றரை இலட்சம் இலங்கைத் தமிழர்களை எடுத்து நோக்கின் அவர்கள் ஐக்கிய நாடுகளின் அகதிகள் சாசனத்திற்கேற்ப ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஆணையாளரால் ஏற்றுக்கொள் ளப்பட்ட அததிகளாக வாழவில்லை. மாறாக இந்திய அரசின் கைகளில் தங்கியிருக்கும் நாடற்ற தற்காலிக அகதிகளாகவே வாழ்கின்றனர். இலங்கை-இந்திய அரசுகளின் உறவுநிலை ஆட்டத்திற்கு ஏற்ப இவர்கள் வாழ்வும் ஆடிக்கொண்டே யிருக்கும்.

1987 மார்கழி வரை வசிப்பிட அனுமதி (Residential Visa) தமிழ்நாட்டில் வாழும் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்டது. அதன்பின்னர் அதாவது 1988 ஜனவரி முதல் விசா புதுப்பிப்பது நிறுத்தப்பட்டது. இதனால் அன்று முதல் இன்றுவரை இவ் அகதிகள் தமிழகப் பொலிசாரின் தயவில் விடப்பட்டுள்ளனர். இந்நிலையில் இங்கு முறைசார் கல்வியில் நுழைந்த அகதிகளை எடுத்து நோக்கின் 1984 முதல் 1987 வரையான ஆண்டுகளில் மருத்துவ பொறியியல் துறைகளில் தமிழக மாணவர்களுக்கு என 3% இடத்தை வழங்கினர். இந்த 3% இடத்தைக் கூட இடம் பெயர்ந்த இந்தியத் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட வீதத்தில் இருந்தே மத்திய அரசு வழங்கியது.

கல்லூரிகள்- இரண்டாந்தரக் கல்வி நிலையங்கள்- ஆரம்பக்கல்வி நிலையங்களைப் பொறுத்தவரை ஓரளவு தாரான மனதுடன் இலங்கை மாணவ அகதிகளை அனுமதித்தனர். ஆனால் 1988ல் விசா மறுக்கப்பட்டு விட்ட நிலையில் கல்லூரிகள் புதிதாக

"அதுதான், இப்ப கொழும்பிலை 83 இலை இருந்ததிலும் பார்க்க எங்கடை சனம் 3 மடங்கு அதிகம். மாறிமாறி சிங்கள-முஸ்லிம்-தமிழர் படுகொலையள் தொடருமெண்டா பொறுமை இழந்து 83 கலவரம் மாதிரி அதிலும் பெரிசா ஒண்டை நடத்தினாலும் நடத்துவாங்கள். அழிவை சொல்லேலாது!".

"நீங்கள் அப்பிடிச் சொல்லுறீங்கள். அப்பிடி ஒரு கலவரம் நடந்தால்தான் நல்லம் எண்டு நான் சொல்லுறன். ஏனெண்டா யோசிச்சுப் பாருங்கோ.... 83 இலை எங்களுக்கு கிடைச்ச "Publicity" மாதிரி பிறகு எப்பவும் எங்களுக்கு கிடைச்சதே? பிறகென்ன?" வீரத்துடன் தனது சிந்தனைத் துலக்கத்தை ஆவேசமாக முன்வைத்தார் வீட்டுக்கார டாக்டர்.

## இன்னும் நல்லூர் கந்தன் தான்

"முஸ்லிம்சை துப்பரவாய் நம்பவே ஏலாது!" என முடிவாகச் சொன்னவர் தொடர்ந்தார். "எங்களிலை சிலபேர் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பினம். எங்கை அவங்கள் எங்களோடை நிண்டதாய் சரித்தரத்திலை எங்காவது காட்டட்டும் பாப்பம்!! அவங்கள் அசல் தொப்பி பிரட்டியள் தான்." அவரது அரசியல்-சமூகவியல் சவால்கள் காதில் விழுந்ததோ என்னவோ, குழுமியிருந்தவர்கள் கடுதாசிக் கோப்பையிலுள்ள சைவச் சாப்பாடிலிருந்து கவனத்தைத் திருப்புவதாக இல்லை.

"இந்தியா-சிறிலங்கா-இந்தியா-சிறிலங்கா என சுழண்டு சுழண்டு வாற எங்கடை இயக்கங்களைப் பார்க்கவோ?" கேலியாகக் கிளறினார் அங்கிருந்த விசமத்தனக்காரர் ஒருவர். "துரோகத்துக்கும் tactics க்கும் இடையே பெரிய வித்தியாசம் இருக்கு" கோபத்துடன் பதில்தந்தார் விளக்கவாதி.

"அதைவிடும், அப்ப... கிறிஸ்டியன்ஸ் என்ன மாதிரி?" கேட்டவர் திசைமாற்ற முனைந்தார். அவரிடம் பதிலை எதிர்பார்த்தார் அவர்? இல்லை! இவரது பதில்களுடாக சுயரூபத்தை...

"கிறிஸ்டியன்ஸ்சோ? சரியான பாண்டட்ஸ்.." என்றவர் சற்று சுணங்கிய பின் "கதலிக்ஸ் பரவாயில்லை!" என்று கிறித்தவர்களில் ஒரு சாராருக்காவது தனது தேசபக்த சேர்டிபிக்கட்டை வழங்கினார்.

"அப்படியெண்டா... செல்வநாயகம்..?" விசமக்காரர் விடுவதாக இல்லை.

எங்குதான் இந்த சிறு 'கலந்துரையாடலும்' இவை போன்ற மேலும் இருபதும் இடம் பெறுகின்றன?

இடம்: இலண்டன் ஈஸ்ட்காம் (Eastham) முருகன் கோவில்.

காலம்: கிறிஸ்தவரின் புதுவருடம் (செவ்வாய்), 01.01.1991.

ஆம்! இங்கே எமது சமூகம் மதவேறுபாடுகளை மீறி பாந்ததன்மையுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவரின் தினமாகையால் அரிதாகக் கிடைக்கும் ஓய்வு தினமொன்றை எளிதாக நிராகரித்திடும் இளிச்சவாய்க் கூட்டம் இதுவல்ல!)

இந்த அமர்களத்தின் சூட்சுமம் புரியாதவர் போல ஸ்தூபிகளை சுற்றிச் சுற்றி வந்த திருமதியவர்கள் நவக்கிரகங்களையும் 9 தடவை சுற்றி வந்தபின் திரும்பியவர் விளக்கம் தந்து கொண்டிருப்பவரைக் கண்டு குசலம் விசாரித்தார்.

திருமதியவர்கள் அக்காலத்திலிருந்தே தமிழீழம் பெறுவதற்கான அடித்தளத்திட்டத்தினை அறிந்திருந்தவராவர் (பல இயக்கங்களுக்கு முன்னரே!). 'ஒரே இயக்க' strategy தன்னுடையதுதான் என அவர் கதைக்கும் போது அடம் பிடிப்பது பெரும் வேடிக்கையானதன்று. கிண்டல்காரரின் கண்களோ புன்சிரித்தன.

"என்ன பாருங்கோ, நல்லூர் கந்தனுக்கு அரோகரா என்று சொல்லுறிங்கள். அவருக்கு பேர் மாத்தினது தெரியாதோ?" அந்தச் சிரிப்பினை வாய்க்கும் பொருத்தினார்.

www.tamilarangam.net

மாணவர்களை அனுமதிக்க மறுத்தது. இதற்கிடை அகதிகளுக்கான இந்திய அரசின் அடையாள அட்டை வழங்கல் நடைமுறைப்படுத்தப் பட்டதால் இவ்வடையாள அட்டைகள் உள்ள அகதி மாணவர்கட்கு கல்லூரி- பள்ளிக்கூட அனுமதி வழங்கப்படலாம் என சுற்று நிருபம் விடுக்கப்பட்டு விசா இல்லாது அனுமதி வழங்கப்பட்டது. இதிலும் இந்திய இராணுவம் இலங்கைக்கு சென்றது முதல் இந்திய இராணுவம் மீண்டதற்கும் இடையில் வந்தவர்கள் அகதிகள் அடையாள அட்டை பெறுவதில் பல சிரமங்களைச் சந்தித்ததனால் இவர்களது பிள்ளைகள் கல்விபெற மிகுந்த சிக்கல்களை அனுபவித்தனர்.

இனி இந்தியாவில் தமிழகத்தில் படிக்கும் மாணவர்களை எடுத்து நோக்கின் 1987 வரை இங்கு கல்லூரிகளில் அனுமதிக்கப்படவர்கள் முன்பு இலங்கையில் ஓரளவு முறைசார் கல்வியினைப் பெற்ற மையால் அதன் தொடர்ச்சியாக இங்கும் தங்கள் கல்வியைத் தொடர்ந்தனர். ஆனால் காலம் போகப் போக இந்தியாவில் கல்வி அனுமதிக்கென வந்த இலங்கைத் தமிழ் மாணவர்கள், கல்லூரி- பள்ளி ஒழுக்கக் கோவைகளைப் பின்பற்ற இயலாத அளவுக்குப் பாதிக்கப் பட்டவர்களாக காணப்பட்டனர். ஆயுதக் கலாச்சாரத்துடன் வளர்ந்த இளைய சமுதாயம் தமிழகத்தின் மரபுசார் கல்வி முறைக்குத் தன்னை ஈடுகொடுக்க முடியாது தவித்தது.

அத்துடன் இலங்கையில் தமிழ் மொழி மூலம் தமது கல்வியைப் பெற்ற மாணவர்கள் தமிழகத்தில் கல்லூரிக் கல்வியை ஆங்கிலம் மூலம் படிக்க் வேண்டிய மொழி மூலச் சிக்கலுக்கும் உள்ளாகினர். அத்துடன் இலங்கையின் கல்வி கற்பிக்கும் போக்குக்கும் அதாவது பாடத்திட்டம், ஆசிரிய உத்திகள், நோக்குகளுக்கும், இந்திய கல்விப் போக்கிற்கும் பாரிய வேறுபாடு உள்ளதால் மாணவர்கள் சிக்கல் நிலைக்குள்ளாகினர்.

மேலும் 1984, 1985 களில் தொடங்கி தமது இளநிலைப் பட்டத்திளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் கூட இந்தப்பட்டத்துடன் இந்தியாவில் வேலை எடுக்க முடியாமலும், இலங்கைக்கு திரும்பிச் சென்றாலும் அங்கும் அரசு இப்பட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மறுப்பதினாலும், வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களை இந்திய "கோட்டாவுக்குள்" பெறத்தகுதி யற்றவர்காகவும் திகைப்புக்குள்ளாக்கி உள்ளனர்.

மேலும் தமிழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பலத்த பொருளாதாரப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கு கின்றனர். இவ்வாறாக இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் இளைய சமுதாயமும் "சுடர் மிகு அறிவுடன்" வளரமுடியாது தவிக்கிறது.

---

திருமதி பதில் தந்து அவரை உற்சாகமூட்ட விரும்பவில்லை. ஆனால் அவருக்கோ இந்த அவசியம் எப்போதும் இருந்ததுமில்லை.

"எங்களின்ரை வயசு போனதுகளுக்குத்தான் கஸ்டமாயிருக்கும் என்ன? நல்லூர் கந்தனுக்கு அரோகரா எண்டு சொல்லுறதுக்கும் ஆறேழு சொற்களிலை அரோகராச் சொல்லுறதுக்கும் பல்லுப் போற வித்தியாசம் தானே?"

"ராசா நான் நெடுகலும் தான் கவனிச்சுவாறன் உமக்கு என்னோடை சேட்டை கூடிப்போச்சு! உந்தப் பேர்மாத்தங்களிலை எனக்கொரு கவலையுமில்லை. என்னைப் பொறுத்தவரை நல்லூர்க் கந்தன் நல்லூர்க் கந்தன் தான்!"

"அது சரிதான்.. கடவுளை நப்பாண்டிட பண்ணலாம். உங்களோடை கொஞ்சம் கவனமாகத்தானிருக்க வேணும்!" ராசா சிரித்தபடியே மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

கோவிலில் கிறிஸ்தவர்களது புத்தாண்டைக் கொண்டாடும் சைவர் கூட்டம் பெருகிக் கொண்டே இருந்தது.

*எம்மவரின்*
*சோசலிச*
*நியாய விலைக்கடைகளில்*
*V.P இன் செருப்புக்களும்*
*கிடைக்கும்.*

"சோசலிச வாழ்க்கை முறையோ?.. சும்மா போங்கடாப்பா..." காதில் பட்ட வார்த்தைக்கான தனது விளக்கத்தைத் தந்தவாறே தனது பலசரக்கு வீடியோ கடையினுள் தேங்கி விட்ட கூட்டத்தினை அன்பாக வெளிநகர்த்த முயன்ற வண்ணமிருந்தார் நாதன்.

கிணற்றுள் விழுந்து, தன்பாட்டிலேயே பட்டைக் கயிறு பிடித்தேறி வெளியே வந்தவன் போன்ற பிரமையில் பேசிக் கொண்டிருந்த சோதிக்கோ நாதனது அன்பு வேண்டுகோள் காதில் விழுந்ததாக தெரியவில்லை. அவனுக்கோ மனதிலும் சிந்தனையிலும் ஒரே குழப்பம்!. ஆமாம்... குழப்பம்!!

"இல்லையடாப்பா உன்னை விடு... உன்னை எனக்குத் தெரியும். மற்றவங்கள் சோசலிசம் சோசலிசம் எண்டு சனத்தைப் பேக்காட்டி கட்டுரையாலும், கவிதைகளென்ன, பேச்சுக்கள் ஏச்சுக்கள் என்ன வியாபாரம் செய்யும் மற்றவ மேலை பூர்சுவா, குட்டி பூர்சுவா என நொட்டை விளக்கங்கள் என்ன, இந்தா விடு புரட்சியை நாங்கள் நடத்திப் போடுறம் லெனின், மார்க்ஸ், மாவோ அவர் இவர் எல்லாம் நான்தான் என்று மார்தட்டல்கள் என்ன?.... ஆனா மற்றப் பக்கத்திலை கடையள் மட்டும் போட்டு வச்சு profit margin பற்றி மனமாறக் கதைச்சுக் கொள்ளுவாங்கள்... அவங்கள் தானடாப்பா... " சோதி தனது மனத்திலுள்ள குழப்பங்களுக்கு வடிவம் கொடுக்க முயன்றான்.

"ஏன் சோசலிசம் பேசுறவை கடையள் போட்டால் மட்டும் தான் பிழையோ? மார்கிறட் தட்சர் gas, electricity என பொதுச் சொத்தெல்லாத்தையும் privatise பண்ணுறபோதெல்லாம் இரகசியமாய் கட்டுக்கட்டாக Share வாங்கியவையும், உயர்மத்தியதர வெள்ளையர்வாழுற பகுதிகளில பெரியவீடுகள் வாங்கி (மற்றவையளை குட்டிபூர்சுவாக்கள் என்றுதிட்டிப்போட்டு!) Social mobility தேடுறவையும், பேர்த்டேபாட்டி, கொழுக்கட்டைப்பாட்டி எண்டு மாதத்துக்கு மூண்டு பாட்டி வைக்கின்ற சோசலிசவாதிகள் என்னமாதிரி?" சோதியின் குழப்பத்திற்கு தூபம்போட்டான் ரகுசன்.

அளவெட்டியில் அந்த வாசிகசாலையிலுள்ள மணற்கும்பியின் மேலுள்ள நாய்பீகளை பூவரசம் இலையால் அகற்றிவிட்டமர்ந்து VP யிடம் சோசலிச போதனை பெற்றதாலும் பின்னர் அவசரக் குடுக்கைத் தனத்தாலோ - உணர்வுகளாலோ உந்தப்பட்டு சோசலிசம் பேசும் கயவர் கூட்டம் சிக்குண்டு ரட்சிக்கப் பட்டதாலும் சோதிக்கு ஆழ்ந்த வடுக்கள் சேர்ந்திருந்தன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலங்கையில் உள்ள தமிழ் இளைஞர்களின் போக்கு

இனி இன்று இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களை எடுத்து நோக்கின் அவர்கள் பெயரளவில் மரபுசார் கல்வி கற்பது போல் தோன்றினாலும் நடைமுறையில் அவர்கள் "சூழ்நிலைத் தாக்கத்திற்கு" அடிமையானவர்களாகவே காணப்படு கின்றனர். எந்தப் பிரச்சினைக்கும் வன்முறையைத் தீர்வுக்குத் துணையாக நாடும் போக்கு இவர்களிடம் மிகுந்துள்ளது. தமது நாட்டின் இனத்தின் கலாச்சாரத்தின் தொடர்நிலை வரலாற்றை இவர்கள் அறிந்து கொண்டதாகக் கூறமுடியாது.

தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்த வரை "மதம்" ஒரு மேற்கட்டு மானமாகத் (Super structure) திகழ்கிறது. எந்தச் சித்தாந்தத்தைப் பேசினாலும் நடைமுறையில் தமிழ்ச்சமுதாயத்தின் மேல் "மதம்" ஆழமான வழி நடத்தலைக் காட்டி வந்துள்ளது. ஆனால் இன்றைய இளைய சமுதாயத்தடையே இந்த மதம் என்கிற மேற்கட்டுமானத்தின் சிதைவை உணரக் கூடியதாக உள்ளது. அதேவேளை அவர்கள் எந்த ஒரு சித்தாந்தத்தினது வேரையோ அல்லது சுயமான ஒரு சித்தாந் தத்தையோ கடைப்பிடிப்பவர்களாகவும் இல்லை. எனவே இவர்கள் ஒரு "சிந்தனை வெற்றிடத்துள்" தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியான ஆயுதக் கலாச்சாரம் ஒரு விதமான மனத்துணிவை இவர்களுக்கு கொடுத்துள்ளது. அதேவேளை கற்கும் கல்வி அவர்களது வாழ்விற்கு உதவாமலும், கல்வியை விட வெளிநாட்டு உழைப்பு வளமான வாழ்வைத் தரும் என்ற நம்பிக்கை வலுப்பெற்று வருவதாலும், இவர்கள் கல்வியை தமது வாழ்வின் வளர்ச்சிக்கு தேவையற்ற பொருளாகக் கூடக் கருதுகின்றனர். முதியவர்களினால் வழி நடத்தப்பட்டு வந்த முறை மாற்றப்பட்டு முதியவர்களது ஆலோசனை கூட தீர்மானங்களை மேற்கொள்ளத் தேவையற்றது என்னும் எண்ணம் தலைதூக்கியுள்ளது.

இந்நிலையில் சிலர் பல்கலைக் கழக அனுமதி பெற்றும் தொழில் நுட்ப கல்லூரிகளின் அனுமதி கிடைத்தும் வழமையான மரபுசார் கல்வியை பெறுகின்றனர். காலத்தின் கோலத்தால் கல்வியாண்டு பின்தள்ளப்பட்ட நிலையில்பட்டங் களைப் பெறுகின்றனர்.

ஆயினும் இவர்கள் ஒரு சுதந்திரமான கருத்துப்பரிமாற்றல் சூழலில் தமது கல்விச் செல்வத்தை பெறுவதாகக் கூறமுடியாது. சமுதாய முன்னேற்றத்தை விடத் தமது முன்னேற்றமே இவர்களின் கல்விப்பயனாக மாறுகிறது.

---

ஆனால் 'சோசலிசம்' என்பதிலும், அதற்கான 'வாழ்க்கைமுறை' என்று ஒன்று உண்டு என்பதிலும் அவன் மனம் தளம்பாதிருந்தது. அதனால்தான் 'அந்த' குழப்பம் போலும்!

'தனிமனித விடுதலை பெற்றுத்தர விளைந்திடும் ஆன்மீக மதங்களுக்கும், இந்திய மக்களை வெள்ளையர் காலனித்துவத்திலிருந்து மீட்ட காந்தியத்திற்கும், சமுதாயத்தின் முன்னேற்றத்தை வேண்டி நிற்பதாகக் கூறிக்கொண்ட - கொள்ளும் பலதரப்பட்ட சித்தாந்தங்களுக்கும் சிந்தனைகளுக்கும் அவற்றிற்கே உரித்தான வாழ்க்கைமுறைகள் இருக்கின்றன. ஆயின் மனிதனது சகல நுகர்வுத்தன்மைகளின் தரத்தை அதியுயர் பீடத்திற்கே கொண்டுசென்றுவிடும் என மார்க்சினால் அடையாளம் காணப்பட்ட சோசலிசத்திற்கும் அதற்கே சொந்தமான வாழ்க்கைமுறை எப்படித்தான் இல்லாது போய்விடும்? இது அவனது சிந்தனைவாதம். ஆனால் கண்டுகொள்வதோ குழப்பம்!

சோவியத்யூனியனில் stockmarket வரப்போகுதாம். புதிய ஜனநாயகக் குடியரசோ தினமன் சதுக்கத்தின் மேலும் ஓர்படி ஏறிச் சென்று ஏற்கனவே ஒரு stock market தன்னை நடத்துகின்றதாம்! அங்கே குடியரசின் தொழிற்சாலைகளில் share களை Dollar, Sterling போன்ற அந்நிய பணத்தினால் மட்டுமே வாங்கிக் கொள்ள முடியுமாம்! தொழிலாளரது 'பொதுச்சொத்து' என்பதற்குத்தான் எத்தனை பரிமாணங்கள்? இதற்கெல்லாம் விளக்கம் தரக்கூடியவர் யார்? எவராவது... ஞானபண்டிதர்கள் இங்கே சிறிதும் கவனம் செலுத்த மாட்டார்களா?

கணீரென்ற குரலில் அங்கே ..." ஏன் சோசலிச வாதிகள் கடைகள் வைக்கக்கூடாது, வீடுகள் வாங்கப்பிடாது என்று யார் சொன்னது?" எனக் கேட்டவண்ணம் தனது நெற்றிக் கண்ணை சோதி பக்கம் திருப்பினார் ஒருவர். மார்க்ஸ், லெனின், மாவோ போன்றோர் எல்லோரையும் நேரடியாகவே கண்டு தீட்சை பெற்றவர்போல அவர் குரலின் தொனிப்பைக் காட்டிக் கொண்ட போதிலும் " அப்பாடா" என நிம்மதிப் பெருமூச்சு சோதியிடமிருந்து கிளம்பவில்லை. அவர் தொடர்ந்தார். "எனக்கு அப்பவிருந்தே தெரியும்! உனக்கெடாப்பா நெடுகலும் ஒரு குழப்பம் இருக்குமெண்டு!" தனது தீர்க்கதரிசனத்தை சரித்திரத்தில் சேர்த்துக் கொண்டார். ஆனால் யாரும் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

"மைச்சான் எல்லாரிலும் பார்க்க 'hardlife' கதையளந்து கொண்டுவாற சோசலிசவாதிதான் மிச்சம் dangerous. அவங்களிட்டை ஆட்பிட்டியோ உன்பாடு போச்சு!" மற்றவர்கள் அவனைக் கண்களால் விளக்கம் கோர அவன் தொடர்ந்தான்.

" அப்பாவுக்கு சரணவாதம் வந்து ஒரு காலும் ஒரு கையும் வழங்காமல் போனது 6 வயசிலை. அம்மாவுக்கு வீட்டைப் பார்ப்பதே கஸ்டமான வேலை. அப்பிடியான நிலமேலையும் அவையள் தோட்டமும் நடத்தி, பின்னேரங்களில் கூலிக்கு சுருட்டுச் சுத்தியும் தான் எங்கள் 17 பேரையும் அவையள் வளத்தினம். நான் சின்னன். பள்ளிக்குப் போக முதல் 750,000 போயிலைக் கண்டுகளுக்கு குடத்தாலை தண்ணி அடிச்சிட்டுத் தான் போகவேணும். எங்கடை கஸ்டம்.... மத்தியானச் சாப்பாட்டுக்கு காய்ஞ்ச பாணும் தேங்காய் சிரட்டைத் துண்டுகளும் சீமைக் கிளுவை இலையில் தந்து விடுவா அம்மா...' இப்படிக் கதையளந்து கொண்டு வாற ஆசாமியைத் தான் நான் mean பண்ணினனான்".

"எடே! உன்ரை கிண்டல்கள் விளங்கிறது கஸ்டம். கனகாலம் Europe இலை இருந்தாக்கும். ஆங்கிலப்பாணியாத் தான் கிடக்கு. யார் சொன்னார் என்று தெரியவில்லை.

நீங்கள் எல்லாரும் முடிவிலை எதைச்சொல்ல வாறியள் எண்டு விளங்கிக்கொள்ள முடியவில்லை! உங்கடை கதை ஒரே குழப்பமானதாயும் இலக்கில்லாததாயும் இருக்கு." என வியப்புடன் எள்ளிநகை செய்தார் அங்கு முடிவில் வந்து சேர்ந்த பத்திரிகை ஆசிரியர் ஒருவர். இவர்களுக்கு மட்டுமே facts என்பது அசரீரிவாக்குகளால் ஒளிவேகத்தில் கிடைத்துவிடும் என்பதை சாதாரணரான மற்றவர் எவ்வாறறிவர்?

நீங்கள் என்னத்தையும் கதையுங்கோ. முதலில வெளியில போங்கோ. நாங்கள் ஏழுதலைமுறையா வியாபாரம் செய்யிறம். தமிழர் Jews, Englishகாரர்மாதிரி வியாபார ரத்தம் ஓடுற ஒரு சாதி. ஒண்டு சொல்லுறன் உங்கடை சோசலிச நியாயவிலை கடையளில எல்லாம் VP யின்ர செருப்புகளும் வாங்கலாம்." என கூறி முடித்த நாதனது விவேகத்தை வியந்தனர் மற்றவர்கள்.

ஆனால் பத்திரிகை ஆசிரியரோ புதிய விளக்கம் தர "அந்த" சிறு சிவப்பு புத்தகத்தை சேட்டின் முன் பொக்கற்றில் இருந்து எடுக்கமுயன்றதைக்கண்ட மற்றவர்கள்..."மிளகாய்தூள் என்னவிலை" என கேட்டபடி நின்றார் ஒரு தமிழ் பெண். "நான் இங்கு வேலை செய்வதில்லை என்றபடி "நாதன்... நாதன்..." என உரத்தகுரல் கொடுத்தார் ஆசிரியர். ●

www.tamilarangam.net

## எதிர்காலத்துக்கு புதிய கல்விமுறையும் புதிய அமைப்புகளும் தேவை.

எனவே இவ்வாறாக இலங்கைத் தமிழ் இளைய சமுதாயத்தின் சுடர்மிகு அறிவுத் தன்மை தள்ளாடு கையில் நாளைய சமுதாயத்தின் சிந்தனைத்திறன் எப்படி அமையப் போகிறது என்ற கேள்வி எழுகிறது.

மரபுசாராக் கல்வி முறைகள் முக்கியப் படுத்தப்பட வேட்டிய நிலை தோன்றி உள்ளது. அமைதிக்கல்வி, மனித உரிமைக்கல்வி போன்ற துறைகளின் தேவை அதிகரித்துள்ளது. வழிப்படுத்தல் கல்வி (கவுன்சிலிங்) இன்றைய இளைய தலைமுறையின் தேவைகளில் ஒன்றாகியுள்ளது. அங்கவீனர்கள் - பார்வையற்றோர் - கேள்வியற்றோர் பலர் எமது மண்ணிலே சூழ்நிலைத்தாக்கத்தால் தோற்றுவிக்கப் பட்டுள்ளனர். இவர்களது எதிர்காலத்திற்கான கல்விமுறையும் திட்டமிடப்படவேண்டிய ஒன்றாகியுள்ளது.

மேலும் பல குழந்தைகள் அனாதைகளாக தங்கள் எதிர் காலத்தை நோக்கி நிற்கின்றனர். இவர்களுக்கு கல்விவழங்கக் கூடிய அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. சமுதாயத்தின் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான சமூகசேவை கல்விகள், எமது மண்ணிலேயே வளர்க்கப் படவேண்டிய தேவை உள்ளது. வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் கல்வியை ஒழுங்கு படுத்தி நெறிப்படுத்தக் கூடிய எம்மவர் அமைப்புகள் தேவையாக உள்ளது. இவ்வாறாக சூழ்நிலைத் தாக்கம் "சுடர்மிகு அறிவினை" அழிக்காமலும் சுடர்மிகு அறிவு சமுதாய வளர்ச்சிக்கு வெளிச்சம் போடவும் உழைக்க வேண்டிய கடமை ஒவ்வொரு ஈழத் தமிழனுக்கும் உண்டு. ●

## வாசகர்களிடமிருந்து....

சின்ன ராஜேஸ்வரன்

ஜேர்மனி

தங்களது கதிரின் இதழ் 4ல் சுவிஸ்-இலங்கை தொடர்பான நல்ல கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. அது தொடர்பாக அட்டைப்படத்தில் பிரசுரித்த சுவிஸ்படத்தில் அடையாளங்கள் சுவிஸின் எது பற்றி என்பது தெரியாத ஒன்றாக உள்ளது. அது மொழிவாரியானதாகவோ தரைதோற்றவாரியானதாகவோ, எதுவென்று அறியமுடியாதாக உள்ளது. இது சுவிஸ் பற்றி அறியாதவர்களுக்கு சரியாக இருக்கலாம். ஆனால் சுவிஸின் அரசியல் தொடர்பாகவும், சுவிஸ் பற்றிய விடயங்களில் அத்துபடியான என் போன்றவர்களுக்குப் பெரும் குழப்பம் தருவதாக உள்ளது.

திரு. பீற்றர் லொயன் பெக்கரின் சில தரவுகளும் முடிவுகளும் பெருங்குழப்பத்தைத் தருவதாக உள்ளன. இது தொடர்பான எனது சந்தேகங்களுக்கு பீற்றர் நேரடியாக என்னுடன் கதைப்பார் என்றால் ... நானும் அதற்கு எனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரும்பான்மை மொழி பேசும் மக்கள், சிறுபான்மை மொழி பேசும் மக்கள் மீது ஆளுமை செலுத்தும் போக்கும் சுவிஸில் இல்லை என்று கூறியுள்ளார். ஃபிறைபோக் மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களில் ஜேர்மன் மொழி புறக்கணிக்கப்பட்டும் பீல் பிரதேசத்தில் உள்ள நீதிமன்றங்களில் பிரஞ்சு மொழி புறக்கணிக்கப் பட்டும் வருகிறது.

பேணில் வாழும் ஒருவர் ஜெனீவாவில் பாடசாலை அனுமதி பெறுவதைவிட ஜேர்மனியில் பெறுவது இலகுவானது. நாங்கள் பேராதனையில் அனுமதிபெறுவதைவிட பச்சையப்பன் கல்லூரியில் பெறுவது போல இது இல்லையா?

எல்லைப் புற மாகாண நிருவாகங்களில் பலவித மொழிப்பாகுபாடுகளும் புறக்கணிப்பு, ஆளுமைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவை (திருகோணமலை, வவுனியா போல..) இயல்பானவையாகும்.

மேலும் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளின் ஆதிக்கம் ஏற்படாதவகையில் சுவிஸ் மக்கள் தமக்குள் ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இலங்கையைப் பொறுத்தவரை காணமுடியாது எனக்குறிப்பிட்டுள்ளது தவறு.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியா தமிழர், சிங்களவர் இரு இனத்தவரிலும் ஆளுமை செலுத்த வழியுண்டு. சமஷ்டி மூலமான தேசிய இனப்பாதுகாப்பு இலங்கையில் உறுதிப் படுத்தப்படும் என்றால் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு ஓடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. தமிழ்நாட்டின் வாயிலாகவே இந்தியா இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சிக்கும். சுவிஸ் மக்கள் எந்த மொழி பேசினாலும் சுவிஸ் என்ற ஐக்கியத்திற்குள் வந்தது போல இலங்கையர் என்ற நிலைக்குள் தமிழரும், சிங்களவரும் வரும் நாளிலே வெளியாரின் ஆதிக்கம் தடுக்கப்படும்.

இலங்கையில் ஒருதேசிய இனம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளவே சமஷ்டி முறையை நாடுகின்றது என்பது மட்டுமல்ல 1291ல் தென்பகுதிப் படை எடுப்புக்களில் இருந்து தம்மைக் காத்திடவே மூன்று மாநிலங்கள் தமக்குள் ஒரு கூட்டை ஏற்படுத்திக் கொண்டதும் உண்மை. ஆரம்பத்தில் பாதுகாப்பையே முதலாகக் கொண்டனர். அதன் வளர்ச்சியே இன்று பொருளாதார விருத்தியாகவும், தேசிய வருமானப் பங்கீட்டையும் முதன்மைப்படுத்தக் கூடியதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இலங்கையும் தேசிய இனப்பாதுகாப்பிற்காக சமஷ்டி முறையைக் கைக்கொண்டால் எதிர்காலம் பொருளாதார விருத்தியையும், தேசிய வருமானப் பங்கீட்டையும் கொண்டதாய் மலரும் என்பது வெளிப்படை.

மேலும் சுவிஸில் பேர்ண் மாநிலத்தில் இருந்து பிரிந்த யூரா (Jura) வின் வரலாறு சுவிஸ் பிரிவினையை விரும்பாமல், யூரா பிரதேச மக்களின் உணர்விற்கு மதிப்பு அளித்தது. யூராவை மாநிலமாக அங்கீகரிக்காவிட்டால் தனி நாடாகப் பிரகடனப்படுத்த பெல்ஜியம், பிரான்ஸ், கனடா போன்ற பிரெஞ்சு மொழி நாடுகள் ஆதரவு அளித்து வந்ததைக் கவனத்தில் கொள்ளவேண்டும். நாட்டில் சில வன்முறைகள் தலை தூக்கியதும் ஜேர்மன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழி பேசும் பேர்ன் மாநிலத்தவர்கள் தாமாகவே கீழிறங்கி வந்து யூராவைத் தனி மாநிலமாகத் தம்மில் இருந்து பிரிந்து செல்ல வழி விட்டனர். இந்த மனப்பக்குவம் சிங்கள மக்கள் (அரசு) மத்தியில் இன்னும் எழவில்லை.

பேர்ன் மாநிலத்தவர்களின் முன்மாதிரியை ஏனைய இனமக்களும் கொள்ள வேண்டும். சுவிஸின் போக்கு அனைத்திலும் வேறுபாடானது தான். அதன் சமஷ்டி முறை கறையான் புற்று வகை போல உள்ளன. எங்களால் நேற்றுவரை நம்பப்பட்டு வந்த சோசலிச முகாம்களில் இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது அங்கு பலமான சமஷ்டி முறை உள்ளது எனச்சொல்லப்பட்டது. இன்று ஆர்மீனியா, அஜபையான், பால்டிக் போன்ற சோவியத் மாநிலங்கள் விளங்கிவிட்டது.

மேலும் பீற்றர் தனது முடிவுரையாகச் சொல்லியுள்ளதில் சுவிஸ் சமஷ்டி முறை இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பது ஜீரணிக்க முடியாததாய் உள்ளது.

சுவிஸில் நிலவுகின்ற சமஷ்டி ஆட்சி முறை என்பது பல்லின மக்கள் வாழும் நாடுகளுக்கு பொருத்தமானதென்பது மறுக்கமுடியாததாகும். உலகிலேயே திறமையான சமஷ்டி ஆட்சி நிலவுகின்ற நாடு என்றால் அது சுவிஸ்நாடு ஆகத்தான் இருக்கமுடியும்.

அது சரி. சுவிஸின் சமஷ்டி முறை இலங்கையின் சூழலுக்குச் சரிவராது என்றால்? சீனாவின் சூழல், ரஷ்யாவின் சூழல் எல்லாம் இலங்கைச் சூழலுக்கு ஏற்புடையதாகி விடுமா?

சுவிஸ் போன்ற முதலாளித்துவ சுரண்டும் நாட்டவர்கள் எத்தகைய சமூக உதவி நிறுவனங்களிலோ, ஆட்சியிலோ, தோழர்களாவோ இருந்தாலும் அவர்கள் அடிப்படையில் தங்கள் சுரண்டலுக்கு பாதகம் வராத கருத்துக்களையே முன்வைப்பார்கள். அந்தவகையில் தோழர் பீற்றரால் முன்வைக்கப்பட்டது சுவிஸின் சுரண்டல் பாதிக்கப்படாத தீர்வேயாகும். இலங்கையில் பிரச்சினை இருந்தால் தானே இவர்களது சுரண்டலுக்கு வழிகிடைக்கும்.

---

சு.வணங்காமுடி

இலண்டன்.

அன்புடன் கதிர் ஆசிரியர் குழுவிற்கு

வழமையான formula படைப்புகளை தாங்கொண்ணா கொப்பியடி சித்தாந்த கிரந்தங்களை முன்வைத்தும், தமிழீழ மக்களது உண்மையான பிரச்சனைகளை ஆராயாது பதைரப்பட்ட கருததுக்களை செவிமடுக்காது விரைந்து போன காலத்திற்கு ஓரளவு ஈடுசெய்யத் துணிந்து முற்பட்ட நீவிர் "புதுக்கவிதை" என்பதில் மட்டும் தடங்கி விட்டது ஏன்? இதழின் பக்கங்களை வீணடிப்பதும் ஏன்?

என்னைப் பொறுத்தவரை புதுக்கவிதைகளில் 99% வீத்திற்கும் மேற்பட்டவை வெறும் formula படைப்புகள் என்பதில் ஐயமில்லை. கூறப்படும் கருத்துக்களில் எள்ளளவு நம்பிக்கையோ எதுவித யோக்கியதையுமோ மற்றவரது இழப்புகளையும் உணர்ச்சிகளையும் மூலதனமாகக் கொண்டு சமூகத்தில் ஒருசிலபடி உயர்ந்து கொண்டதாகக் காட்டிட எடுக்கப் படும் மிகவும் சீப்பான முயற்சியே புதுக்கவிதை என்னும் உத்தியாகும். எனது அனுபவத்தில் இவற்றை எழுதுபவர்கள் நண்பர்களற்ற தனிமனிதர்களாக காலம் கழிப்பதுடன், சமூகக் கூட்டங்களில் தம்மைப் பெரும் போதனைக் குருக்களாக (teacher leader) காட்டிக் கொள்வதையுமே கண்டுள்ளேன்.

எப்படி formula படைப்பு எனக் கூறமுடியும்?
நிரூபணம் இதோ!!

புதுக்கவிதைக்கு(formula) வேண்டியவை:

1. கடதாசி, பேனா
2. ஏதாவது காதில்பட்ட மறந்துவிடாத கருத்தாம்சம் (உ-ம்: தியாகம், காதல், ஜனநாயகம்...)
3. சிறு பொறுமையும், தளராத தன்னம்பிக்கையும்
4. தேர்ந்தெடுத்த கருத்தாம்சம் கொண்டு 10-15 வசனங்கள் கொண்ட குறிப்பை எழுதி விடும் வல்லமை(கற்பனை அவசியம்!)
5. கருத்தாம்சம் சிதைந்து விடாதபடி அவசியமற்ற சொற்களை இடையிடையே களைந்து எஞ்சியவற்றை 4,5 சொற்கள் கொண்ட வரிகளாக ஒழுங்கு செய்து விடும் பேரறிவு
6. (இது extra) முடியுமாயின் வசனமுடிவுகள் rhyme பண்ணுமாறு எழுத உதவும் vocabulary

பாருங்கள் பின்வரும் உதாரணத்தை. இங்கே தேவையற்ற சொற்களின் கீழ் கோடிடப்பட்டுள்ளது.

எலும்பொட்டிய வயிற்றுடன், முறிந்து தேயும் கொம்புடன் அந்த பசு சாலையோரமாக நடந்து வரும் காட்சி பரிதாபமானது. சிதைந்து போன வீடுகளையும், பாவியாரது குண்டுகளால் நொருங்கித் தகர்ந்து போன கோவில்களுமாக காணப்படும் இவ்விடம் யாழ்நகர் தானோ? ஐயையோ! களங்களில் ஆமிக்காரர்களும், களத்தில் சுற்றிவளைத்து தமிழீழ ஆசாமியருமாக எமது தேசம் இப்படியாக அழிந்து போகிறதே! அந்தப்பரிதாபத்தைத்தான் அந்த பசுவின் காலடிப் போக்கு எமக்கு நன்கு உணர்த்துகின்றது. புல்லையும், புண்ணாக்கையும், இயக்கப் பிரசுரங்களையும், தமிழீழச் செல்வமான சுவரொட்டிகளையும், புழுக்கொண்ட பாணையும், அழுகிய மாங்காயையும் வேறுபாடு எதுவுமின்றி தீனியாகக் கொண்டு ஜனநாயக முறைப்படி அவற்றினை புசித்து சாப்பிடுவது எம்மவர்க்கு நல்ல போதனையாகவே படுகிறது.

புதுக்கவிதை:
ஜனநாயகப் பசு

எலும்பொட்டிய வயிறு
முறிந்து தேயும் கொம்பு- பசுவின்
சாலையோரக் காட்சி பரிதாபம்
சிதைந்து.. தகர்ந்து.. நொருங்கி..
வீடுகள், கோவில்கள்- பாவியர்
குண்டுகளால்... ஐயையோ! யாழ்நகர்தானோ?
தளங்களில் ஆமியர்... களத்தினில் ஆசாமியர்
பசுவின் காலடிப் போக்கில் ... பரிதாபம்..ம்.ம்..
புல்லைப் புண்ணாக்கை
இயக்கப் பிரசுரங்களை
புழுக்கொண்ட பாணை
அழுகிவிட்ட மாங்காயை
தமிழீழ செல்வம்தாம் சுவரொட்டிகளை
வேறுபாடின்றிப் புசித்து
சாப்பிடுகிறது .பசுவின் ஜனநாயக
ஞானம் புரியாதோ!
ஜனநாயக போதனை தேறாதோ
எம்மவர் காலம் விடியாதோ!!

இது சில வேளை முதற்பார்வையில் மிகவும் கடினமான வேலையாகத் தோன்றலாம். ஆனால் இரு மணி நேர அனுபவத்துடன் "ஜனநாயகப்பசு" போன்ற "தரமான" கவிதைகளையும், சிறிது கூடிய முயற்சிக்ளுடன் மேலும் தரங்கூடிய படைப்புகளையும் இம்முறையால் யாரும் பெறமுடியும்.

ஆகவே இப்படியான முயற்சிகளை எம்போன்றவர்களுக்கு அவசியமாக hobby யாக விட்டுவைத்து கதிர் பக்கங்களை முறையே பிரயோகப் படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்திகள்

## 221,000 இலங்கையர் வளைகுடா நாடுகளில் அவதி.

வளைகுடா நாடுகளிலுள்ள இரண்டு இலட்சத்து 21 ஆயிரத்து 343 இலங்கையர்கள் பற்றி உறவினர்கள் மிகவும் கவலை கொண்டுள்ளனர்.

இவர்களில் ஈராக்கில் 43 பேர், குவைத் 3400 பேர், சவுதி அரேபியாவில் 1,50,000 பேர், ஓமான் 26,400 பேர், ஜோர்டான் 16,400 பேர், ஐக்கிய அரபு இராச்சியம் 55,600 பேர் கட்டாரின் 6500, பஹ்ரின் 6600, ஜேமன் 1800 பேர் உள்ளனர்.

இவர்களின் நிலைபற்றி விரிவான தகவல் தருமாறு உறவினர்களும் நண்பர்களும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பணியகம், வெளிநாட்டு அமைச்சின் செயலகம், செஞ்சிலுவை சங்கம், வெளிநாட்டுத் தூதராலயங்கள் ஆகியவற்றை கேட்டுள்ளனர். ●

## சிதறல்கள்...

* இனப்பிரச்சினையில் வீடுகளையும் உடமைகளும் இழந்துள்ள மக்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு அவுஸ்திரேலிய அரசின் சார்பில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் 250,000 ரூபாவினை அன்பளிப்பு செய்துள்ளார்.

* வளைகுடா யுத்தம் தொடர்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்த அரசு அனுமதி அளிக்காது என பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அமெரிக்கவினதும் அதன் சார்பு நாடுகளினதும் போர் விமானங்கள், கப்பல்கள் இலங்கைத் தளங்களைப் பாவிக்க அனுமதி வழங்கியுள்ளது. எதிர்க்கட்சிகள் யாவும் அரசின் இம் முடிவிற்கு தமது கண்டனத்தை தெரிவித்துள்ளன.

* இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்காதவரை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியாது என முன்னைநாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ.பி.வெங்கடேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

* வடக்கு கிழக்கு யுத்தத்தாலும் அதன் வெளிப்பாடுகளாலும் கடந்த 10 வருடகாலமாக முகத்துவாரம், அளுத் மாவத்தை, ஹுளுப் பொக்கணை ஆகிய பகுதிகளில் குடியிருந்து வந்த 265 குடும்பங்கள் நூற்றுக்கணக்கான பொலிசாரின் உதவியுடன் அவர்களது வீடுகளை விட்டு அடித்து விரட்டப் பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்கு தாம் பொறுப்பாளிகள் அல்ல என தேசிய வீடமைப்பு அதிகாரசபையும், கொழும்பு மாநகரசபையும் அறிவித்துள்ளன.

* இலங்கையர் அல்லாதோர் இலங்கையில் இரகசிய வங்கிக் கணக்குகளை வைத்திருக்க இலங்கை அரசு வங்கிகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இதனூடாக இலங்கைக்கு வெளிநாட்டு பணமுதலீடுகளை ஊக்குவிக்கலாம் என கூறியுள்ளது.

* தைமாதம் 13ம் 18ம் திகதிவரை பிரித்தானிய வர்த்தகக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. அவர்கள் வர்த்தகம், புடவைக் கைத்தொழில், போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் தாம் மூலதனமிடுவது பற்றி அறிந்து சென்றுள்ளனர்.

* தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைகளுக்கான முற்பணம் தொழிலாளங்களின் சம்பளத்திலிருந்து முற்கூட்டியே கழிக்கப்படுவது குறித்து தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கும், தோட்டத்தொழிற்துறை அமைச்சருக்கும் தந்திகளை அனுப்பியுள்ளனர். தொழிலாளர்களின் வரலாற்றில் இப்படியான சமபவம் இதுவே முதற்தடவை என அவை பத்திரிகைகளுக்கு தெரிவித்தன.

* வடகிழக்கு அன்னையர் முன்னணியும், தென்னிலங்கை அன்னையர் முன்னணியும் இணைந்து செயற்படப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பினை தென்னிலங்கை அன்னையர் முன்னணி தலைவி திருமதி டாக்டர் சரவணமுத்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

* தமிழகத்தின் சிறைகளில் இதுவரை 1250 இலங்கைத் தமிழர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகமானோர் அண்மைக்காலங்களில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

* அண்மையில் கொழும்பில் கைது செய்யப்பட்ட 67 ஆண்களிலும், 14 பெண்களிலும், ஒரு பெண்ணும் 16 ஆணையும் தவிர ஏனைய அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

* யாழ்நகரில் 10 ஆயிரம் பேர் கச்சேரிக்கு ஊர்வலம் ஒன்று இம்மாதம் (7.2.91) நடைபெற்றுள்ளது. தொடர்ந்து நிகழ்ந்து வரும் 'விமான குண்டு தாக்குதல்களை நிறுத்தக்கோரியும்' மலைபோல் உயர்ந்து வரும் விலைவாசி உயர்வை உடன் நிறுத்தக் கோரியும் இவ் ஊர்வலம் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமாகி கச்சேரிவரை சென்று யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. இவ் ஊர்வலத்தில் ஆண்கள், பெண்கள், மாணவர், முதியோர் என பலதரப்பினரும் கலந்து கொண்டனர். ●

## பின்லாந்து இலங்கைக்கான நிதியுதவியை குறைத்தது.

தைமாத இறுதியில் கொழும்புக்கு விஜயம் செய்த பின்லாந்து சர்வதேச அபிவிருத்தி முகவர் (Finnda) நிறுவனத்தின் உதவி இயக்குனர் திரு. J.Pakku இத்தகவலைத் தெரிவித்தார். வருடத்திற்கு 550 மில்லியன் ரூபாய்களை பின்லாந்து அபிவிருத்தி நிதியாக வழங்கி வருகின்றது. எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்கான அபிவிருத்தி நிதியாக

| | |
|---|---|
| 1991ம் ஆண்டு | 550மில்லியன் ரூபாய் |
| 1992ம் ஆண்டு | 30மில்லியன் ரூபாய் |
| 1993ம் ஆண்டு | 250மில்லியன் ரூபாய் |
| 1994ம் ஆண்டு | 10மில்லியன் ரூபாய் |

வழங்கப்படும் என அறிவித்துள்ளார். தமது இலங்கைக்கான அபிவிருத்தி நிதி குறைப்பிற்கு இலங்கை அரசின் மனித உரிமைகள் மீறலும் ஒரு காரணம் என அவர் தெரிவித்துள்ளார். இலங்கை அரசானது பின்லாந்து அரசின் நிதியுதவியில் அம்பாந்தோட்டையில் தொலைதொடர்பு சாதன நிர்மாணிப்பு. கொழும்பு அரசினர் வைத்தியசாலை ஆகியன புனரமைக்கப்படுகின்றன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை

# எனது சோகமான முகம்.



ஜேர்மன் மொழி மூலம்: ஹைன்றிச் போல்
தமிழாக்கம்: சு.தீபன்.

நான் துறைமுகத்தருகே நின்று கடல்புறாவைப் பார்த்துக்கொண்டிருந்த போது, அப் பகுதியில் கடமையிலீடுபட்டிருந்த பொலிஸ்காரனை எனது சோகமான முகம் ஈர்த்திருந்தது. மேலே பறந்தும், கீழே இறங்கியும் இரை தேடிக் கொண்டிருந்த பறவையை அவதானிப்பதில் நான் முற்றாக மூழ்கியிருந்தேன்.

துறைமுகம் எண்ணெய் ஊத்தையில் மங்கியும், கடல்நீர் எண்ணெய் மேலாடை போர்த்தியும் காட்சியளிக்க, கடல்நீர் பரப்பின் மீது அழுக்குகள் மிதந்துகொண்டிருந்தது. கப்பல் ஒன்றுமே பார்வைக்குத் தென்படவில்லை; பாரந்தூக்கி துருப்பிடித்திருந்தது; கிட்டங்கியில் மௌனம் படிந்திருந்தது. எலிகள் கூட துறைமுகத்தின் அழுக்குத் தாங்க முடியாமல் அங்கிருந்து அகன்றிருந்தன. பல வருடங்களாக புறஉலகின் தொடர்புகளெதுவுமின்றி அழகிழந்து காணப்பட்டது அத் துறைமுகம்.

நான் ஒரு கடல்புறாவின் சிறகுகளை அவதானித்துக் கொண்டிருந்தேன். மோசமான காலநிலையை முன்கூட்டியே அனுமானித்து, பயத்துடன், நீர்மட்டத்துடனேயே பறந்து கொண்டிருந்தது. சிலவேளைகளில் மட்டும் சில அடிகள் மேலெழுந்து தனது கூட்டாளிகளுடன் இணைந்து சிறிது தூரம் பறந்து மீண்டும் கீழ் மட்டத்துக்கே வந்திருந்து. எனக்கு விருப்பம் என்று ஒன்று இருந்திருக்குமாயின் ஒரு பாண்துண்டு வேண்டுமென விரும்பியிருப்பேன். கடல்புறாவிற்குக் கொடுப்பதற்காகவும், திசை தெரியாமல் பறந்து கொண்டிருக்கும் அந்தச் சிறகுகளுக்கு ஒரு இலக்கை உண்டாக்க எனக்கு பாண்துண்டு ஒன்று தேவைப்பட்டது. ஆனால் எனக்கும் அந்தப் பறவைகளைப் போலவே பசியாக இருந்தது; களைப்பு; ஆனாலும் எனது சோகத்தின் மத்தியிலும் அங்கு நின்று, காற்சட்டைப்பைக்குள் கைகளை ஒழித்துக் கொண்டு அந்தப் பறவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பதில் எனக்குள் ஒரு சந்தோஷமிருந்தது.

திடீரென அதிகாரபூர்வமான கையொன்று எனது தோள் மீது விழ குரலொன்று "என்னுடன் வாரும்!" என்றது. அதேநேரம் எனது தோளில் விழுந்த கை என்னை முன்னும் பின்னும் உலுப்பிக் கொண்டிருந்தது. நான் அசையாமல் நின்று கொண்டு, கையை அப்புறப் படுத்தி அமைதியான குரலில் "உமக்கு விசர்" என்றேன்.

"தோழரே", இன்னமும் எனது பார்வையில் படாத உருவம் "நான் உம்மை எச்சரிக்கிறேன்" என்றது.

"எனது ஐயா" நான் மீண்டும்...

"இங்கு ஐயா ஒருவரும் இல்லை" கோபத்துடன் கத்திய பொலிஸ் "நாங்கள் அனைவரும் தோழர்கள்" என்றான்.

இப்போது பொலிஸ் என்னை நெருங்கியிருந்தான். நான் எனது சந்தோஷ பார்வையை கழற்றி அவனது விழிகளுள் மாண்டிருந்தேன். அந்த பொலிஸ் வருடக்கணக்கில் கடமையைத் தவிர வேறெதுவும் விளங்கியிராத காட்டெருமை போல காட்சியளித்தான்.

"என்ன காரணத்தால்..." நான் ஆரம்பித்தேன்.

"போதியளவு காரணம்", உடனடி பதில் "உமது சோகமான முகம்".

நான் சிரித்தேன்.

"சிரிக்காதேயும்!" அவனது கோபம் அப்பட்டமானது. நான் முதலில் அவனுக்கு போராக இருந்திருக்க வேண்டும் என நினைத்தேன். பதிவு செய்யப் படாத வேசியோ, குடிகாரமாலுமியோ அன்றி கள்ளனோ, கொள்ளைக்காரனோ அகப்படாததால் என்னைக் கைது செய்கிறான் என நினைத்தேன். ஆனால் இப்போது உண்மையிலேயே விடயம் சீரியஸானது என உணர்ந்தேன். அவன் என்னைக் கைது செய்யப் போகிறான்.

"என்னுடன் வாரும்...!"

"எதற்காக" நான் அமைதியாகக் கேட்டேன்.

நான் உணரமுன்னரே எனது இடதுகை ஒரு கைச்சங்கிலியுடன் இணைக்கப்பட்டு விட்டது. இந்தக் கணத்தில் நான் மீண்டும் தொலைந்து விட்டேன் என்பதை உணர்ந்து கொண்டேன்.

இறுதித் தடவையாக திசையின்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த கடல்புறாவின் மீதும், சாம்பல் நிற வானத்தின் மீதும் எனது பார்வையை எறிந்து, திடீரென கடல்நீரின் மீது பாய நினைத்தேன். எங்கேயோ ஒரு ஜெனரலின் பின்வீட்டிலோ அல்லது சிறைச் சாலையிலோ மிகுதிக் காலத்தைக் கழிப்பதை விட நீரில் மூழ்கிச் சாவது பரவாயில்லை என எனக்குப் பட்டது. ஆனால் பொலிஸ் என்னை இறுக்கிப் பிடித் திருந்ததால் என்னால் சற்றேனும் நகரமுடியவில்லை.

"எதற்காக?" நான் மீண்டும் வினவினேன்.

"நீர் சந்தோஷமாக இருக்கவேண்டும் என ஒரு சட்டம் உள்ளது."

"நான் சந்தோஷமாக உள்ளேன்!" நான் கத்தினேன்.

www.tamilarangam.net

உமது சோகமான முகம்...." அவன் தலையை மறுக்கும் பாவனையில் ஆட்டினான்.

"ஆனால் இந்தச் சட்டம் புதியது" நான்.

"இந்தச் சட்டம் 36 மணித்தியாலம் பழையது. ஒவ்வொரு சட்டமும் அறிவிக்கப்பட்டு 24 மணி நேரத்தில் நடைமுறைப் படுத்தப் படும் என்பதை நீர் அறிவீர்"

"ஆனால் எனக்கு இந்தச் சட்டம் தெரியாது"

"அதன் மூலம் நீர் தண்டனையிலிருந்து தப்பமுடியாது. இந்தச் சட்டம் நேற்றுமுன்தினம், வானொலி மூலம், அனைத்துப் பத்திரிகைகளின் மூலம் அறிவிக் கப்பட்டிருந்தது. இவற்றை" இவ்வேளை அவன் என்மீது உதாசீனமாக ஒரு பார்வையை வீசி "வாசிக்கவோ, கேட்கவோ முடியாதவர்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் அனைத்து வீதிகளிலும் மூலை முடுக்கு களிலும் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. தோழரே நீர் இறுதி 36 மணித்தியாலங்களும் எங்கி ருந்தீர் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்."

அவன் என்னை கூட்டிக்கொண்டு புறப்பட்டான்.

இப்போது என்னிடம் ஓவர்கோட் இல்லாததால் குளிர் உறைக்கத் தொடங்கியது. பசி எனது வயிற்றின் அடிப்பாகத்திலிருந்து மேலெழுந்து பிறாண்டத் தொடங்கியது. இப்போது நான் அழுக்காகவும், சவரம் செய்யாமல் இருப்பதும், சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு தோழர்களும் துப்பரவுடனும், சவரம் செய்யப்பட்ட முகத்தில மகிழ்ச்சியுடனும் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன்.

வீதி வெறுமையாக இருந்தது. பொலிஸ்நிலையம் மிகத் தொலைவில் இல்லை. என்னைக் கைது செய்வதற்கு அவர்கள் எப்போதும் காரணம் கண்டு பிடிக்க முடியும் என்பதை நான் அறிந்திருந்தாலும் எனது இதயம் கனக்கத்தொடங்கியது.

நான் இளமையில் உலவித் திரிந்த வீதி வழியே என்னைக் கூட்டிச் செல்லும் போது துறைமுகத்திலிருந்து திரும்பியதும் நான் இங்கு வரவேண்டும் என விரும்பியிருந்தது ஞாபகம் வந்தது. குப்பையாக வளர்ந்திருந்த பூக்களெல்லாம் மறைந்து துப்பரவாக, சதுரவடிவத்தில் தாய்நாட்டை ஞாபகப்படுத்தும் வகையில் நேர்த்தியாக வளர்க்கப்பட்டிருந்தது. காற்றும், வானமும் மட்டும் முன்னர் போல் எனது கனவில் தோன்றுவது போல் மாற்றமின்றி அப்படியே இருந்தது.

நாங்கள் வீதியால் சென்று கொண்டிருந்தபோது எங்களை எதிர்கொள்ள வேண்டிய பாதசாரிகள் மிக மகிழ்ச்சியான முகங்களைக் காட்டி எமக்கெதிரே வருவதைத் தவிர்த்து அவசரமாக எதிரில் இருந்தோ கடைக்கோ அன்றி குறுக்குத் தெருவினிலோ, அல்லது எதிர்த்த வீடுகளிலோ சென்று மறைந்தனர்.

ஒருமுறை மட்டும் தெருமுடக்கொன்றில் பார்வைக்கு பாடசாலை ஆசிரியர் போல் தோன்றிய வயதுபோன மனிதன் ஒருவர் வேறெங்கும் ஒழிக்க முடியாமல், சட்டத்தின் பிரகாரம் பொலிசுக்கு வணக்கம் தெரிவித்தபின்னர், தனது கடமையை நிறைவேற்ற முழுமுயற்சியும் எடுத்தார். சட்டத்தின் பேரில் அவர் எனது முகத்தில் மூன்று தடவைகள் துப்பி, "நாட்டுத்துரோகி" என என்னை பறைசாற்றவேண்டும். வயதானவர் தனது கடமையை சரியாகத்தான் செய்திருந்தார். ஆனாலும் அவரது தொண்டை காய்ந்திருந்ததால் சில எச்சில் துளிகள் மட்டுமே எனது முகத்தில் பட்டது. நான் சட்டத்துக்கு எதிராக மனம் போன போக்கில் எனது புறக்கையினால் அவ் எச்சிலை துடைக்க முயன்றபோது, பொலிஸ் எனது பின்புறத்தில் உதைந்து தனது மூடிய கைகளினால் எனது முதுகெலும்பின் மத்தியில் தாக்கி. அமைதியான குரலில் "முதலாவது படி" என்றான். அதன் கருத்து-இதுதான் பொலிஸ்காரனினால் கொடுக்கப்படும் அதிகுறைந்த தண்டனை.

**************

நாம் சாதாரண கொங்க்ரீட் இனால் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ்நிலையத்திற்கு வந்தபோது அதன் வாசலில் காவலுக்கு அமர்த்தப் பட்டிருந்த இரு பொலிஸ்காரர்களும் அவர்களைக் கடக்கும் போது என்மீது வழக்கமான "பௌதீக நடவடிக்கைகளை" மேற்கொண் டார்கள். துப்பாக்கி முனையினால் நெற்றியில் ஒருவனும், கைத் துப்பாக்கியினால் தோள்ப் பட்டையில் மற்றவனுமாக தாக்கினார்கள்.

அதன்பின்னர் நாங்கள் வெறுமையான ஒரு அறையில் நுழைந்தோம். அறையினுள் மேசையொன்றின் மேல் தொலைபேசியும், இரு கதிரைகளும் போடப்பட்டிருந்தன. நான் அறையின் மத்தியில் நிறுத்தி வைக்கப்பட என்னை அழைத்து வந்த பொலிஸ் ஹெல்மட்டைக் கழட்டி கதிரையில் அமர்ந்தான்.

முதலில் அனைத்தும் நிசப்தமாக இருந்தது. எதுவுமே நடைபெறவில்லை. எப்போதும் அவர்கள் இப்படித்தான் செய் வார்கள். இதுதான் மோசமான விடயம். எனது முகம் களையிழந்து கொண்டுபோவதை உணர்ந்தேன். எனக்குக் களைப்பாகவும், பசியாகவும் இருந்தது. எனது சோகத்தால் உண்டான சந்தோஷத்தின் இறுதி தடயங்களும் அகன்று போனது. நான் தொலைந்து போனேன் என எனக்குத் தெரிந்தது.

சில கணங்களின் பின் மௌனமாக நெடிய, வெளிறிய மனிதன் ஒருவன் நுழைந்தான். அணிந்திருந்த மண்ணிற சீருடை யிலிருந்து அவன் தான் முன்விசாரணையாளன் எனத் தெரிந்தது. பேச்சேதுமின்றி கதிரையில் அமர்ந்து என்னை நேரடியாகப் பார்த்து,

"தொழில்?"

"சாதாரண தோழன்"

"பிறந்தது?"

"1.1.ஒன்று", கூறினேன்.

"இறுதியாகச் செய்த தொழில்?"

"குற்றவாளி"

இருவரும் தம்முள் பார்வையைப் பரிமாறிக்கொண்டனர்.

"எப்போது, எங்கு விடுதலை செய்யப்பட்டது?"

"நேற்று, 12 வீடு, 13ம் அறை."

"எவ்விடத்தில் விடுதலை செய்யப்பட்டது?"

"தலைநகரில்"

"பத்திரம்"

நான் எனது காற்சட்டைப் பையிலிருந்து விடுதலைப் பத்திரத்தை எடுத்து அவர்களிடம் நீட்டினேன். அவன் எனது தரவுகளை எழுதத் தொடங்கிய பச்சைப் பத்திரத்தில் அதை கிளிப் பண்ணி,

"முன்னைய குற்றம்?"

"சந்தோஷமான முகம்."

இருவரும் தம்முள் பார்வையைப் பரிமாறிக்கொண்டனர்.

"விளக்கம்"

"அந்நாளில்", நான் கூறினேன், "துக்கம் பிரகடனப்படுத்தப் பட்ட ஒரு தினத்தில் எனது சந்தோஷ மான முகம் ஒரு பொலிஸின் பார்வையில் பட்டது. அன்று தலைவர் மறைந்த தினம்."

"எவ்வளவு காலத் தண்டனை."

"ஐந்து."

"மதிப்பு."

"நல்லதில்லை."

"காரணம்."

"வேலையில் திறமையின்மை."

"முடிந்தது."

இதன்பின் முன்விசாரணையாளர் எழுந்து என்னருகே வந்து எனது முன்வாயின் மத்தியில் உள்ள சரியாக மூன்று பற்களைப் பிடுங்கினான். நான் ஏற்கனவே தண்டனைக்குள்ளாக்கப் பட்டவன் என்பதைத் தெரிவிக்கும் ஒரு கடுமையான நடவடிக்கை; நான் முற்றுமுழுதாக எதிர்பார்க்காத ஒரு விடயம்.

முன்விசாரணையாளர் அறையை விட்டு வெளியேற கடும்மண்ணிற சீருடையுடன் விசாரணை யாளர் நுழைந்தார்.

அவர்கள் அனைவருமே என்னைத் தாக்கினர். விசாரணையாளர், மேல்விசாரணையாளர், உயர்விசாரணையாளர், அதிகாரி, மேலதிகாரி என அனைவரும் என்னை தாக்கினர். இடை யிடையே சில பொலிஸ்காரர்கள் சட்டத்தின் பேரில் பௌதீக நடவடிக்கைகளை மேற்கொண் டார்கள். அத்துடன் முன்னர் எனது சந்தோஷ முகத்திற்கு ஐந்து வருட தண்டனை தந்தது போல், இம்முறை சோக முகத்திற்கு பத்து வருடம் தந்தார்கள்.

இந்த பத்து வருடகாலத்திலும் முடிந்தால் ஒரு முகமும் இல்லாமல் இருப்பதற்கு நான் முயற்சி செய்யவேண்டும்.....

www.tamilarangam.net



# அமெரிக்க ஆதிக்கத்தின் ஒரு பரீட்சைக் களம்!

இ.சுதாகர்.



குவைத்தை விடுதலை செய்வதற்காகவும், உலகில் ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்துவதற்குமாகவும் ஜனவரி மாதம் 16ம் திகதி தொடுக்கப்பட்ட யுத்தம், ஆரம்பித்து ஒரு மாதத்திற்குள்ளாகவே அதன் விளைவுகள் உலகில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் தலைமையின் கீழ் பிரித்தானியாவும், பிரான்சும் ஏனைய 25 நாடுகளும் இணைந்து ஒரு மாதகாலமாக ஈராக்கின் மீதும், குவைத்தின் மீதும் குண்டு மாரி பொழிந்து கொண்டிருக்கின்றன.

யுத்த வரலாற்றில் சாதனையை ஏற்படுத்தும் வகையில் நாளாந்தம் பத்தாயிரம் தொன் குண்டுகளை இந்நாடுகளின் மீது இறைத்துக் கொண்டிருக்கும் அதேவேளை செய்தித் தணிக்கை எனும் ஆயுதப்பிரயோகத்தின் மூலம் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் அழிவு, திரை மறைவில் நடாத்தப்பட்டும் வருகின்றது. ஒரு சில நாட்களில் ஈராக்கை குவைத்திலிருந்து விரட்டிவிடுவோம் எனும் பிதற்றலுடன் தொடங்கிய யுத்தம், ஆரம்பமாகி சில தினங்களாகி, வாரங்களாகி பின்னர் மாதங்களாகி இன்று ஒரு மாதத்தின் பின்னரும் எவ்வித முடிவுமின்றி பொதுமக்கள் அழிப்பாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

## பனிப்போரில் குளிர்காய்ந்த ஈராக்

வளைகுடா யுத்தமானது திடீரென உருவாகிய ஒரு விடயமல்ல. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் கிழக்கு ஐரோப்பாவை சுற்றிய நாடுகளில் தனது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் ஏற்படுத்துவது அமெரிக்காவின் உத்தியோக பூர்வ அரசியலாகவே இருந்து வந்தது. அதே போல சோவியத் யூனியனும் தனது அயல் நாடுகளில் தனது பாதுகாப்பை முன்னிட்டு அந்நாட்டு அரசுகளை தனது செல்வாக்கினுள் கொண்டுவர முயன்றது. 40 வருடகால பனிப்போரில் சோவியத் யூனியன் ஈராக், அப்கானிஸ்தான், இந்தியா, மங்கோலியா போன்றவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ தனது செல்வாக்கினுள் கொண்டுவர முயற்சி செய்ய, அமெரிக்கா துருக்கி, ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை தமது நலன் பேணும் நாடுகளாக பாதுகாத்து வந்தது.

1979ல் ஈரானில் இஸ்லாமிய புரட்சி நடைபெற்று கொமெய்னி பதவிக்கு வந்தபோது அமெரிக்காவின் நலன்களுக்கு வளைகுடாவில் பெரும் குந்தகம் ஏற்பட்டது. நீண்ட காலமாகவே கிழக்கு-மேற்கு பனிப்போரில் குளிர்காய்ந்து கொண்டிருந்த ஈராக்கிய தலைமையை அமெரிக்கா தனது பக்கம் வெல்ல வேண்டிய அவசியத்தை உணர்ந்து சதாம் குசைனை ஈரானுக்கு எதிராக யுத்தம் புரிய தூண்டியது.

நீண்ட காலமாகவே சோவியத் யூனியனின் உதவியுடன் உள்நாட்டில் தனது எதிர்ப்புகள் அனைத்தையும் குரூரமாக அழித்தொழித்த சதாம் குசைன் ஈரானை அமெரிக்க உதவியுடன் ஆக்கிரமிக்கும் சாத்தியக்கூற்றை தவறவிட விரும்பவில்லை.

ஈரானுடன் 8 வருட யுத்தத்தை அமெரிக்க உளவு ஸ்தாபனம் சி.ஐ.ஏ இன் தூண்டுதலுடன் ஆரம்பித்த ஈராக் 8 வருட கால யுத்தத்தின் போது இரு முகாம்களிலும் இருந்து ஆயுதங்களைப் பெற்று, ஈராக்கை ஆயுதக் கிடங்காக மாற்றியது.

ஈரானுக்கு எதிராக ஈராக் வல்லமை பெற்ற சக்தியாக மாறுவதை ஊக்குவித்த மேற்கு நாடுகள் விரைவில் யுத்தம் முடிவுக்கு வருமென எதிர்பார்த்திருக்கவில்லை. ஈராக் ஆயுத ரீதியில் தன்னைப் பலப்படுத்தி ஈரானை நிலைகுலையச் செய்ததும் ஈராக்-ஈரான் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுத்த முடிவின் போது ஈராக் ஒரு கடன் பட்ட இராணுவ சக்தியாக மாறியிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈராக்கின் இராணுவபலம் அமெரிக்க நலன்களுக்கு அச்சுறுத்தலானது.

யுத்தத்தினால் ஏற்பட்ட கடன்களைப் போக்குவதற்கும் அராபிய நாடுகளில் எண்ணெய் விலைகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஈராக் ஏனைய நாடுகளின் மீது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தது. ஒருபுறம் ஏகாதிபத்தியத்தின் வால் பிடிக்கும் செல்வந்த நாடுகளான குவைத், சவுதி அரேபியா போன்றவையும், மறுபுறம் இதே ஏகாதிபத்தியத்தினால் பல வருடக் கணக்காக ஒடுக்கப்பட்டு வரும் அராபிய மக்களுமாக அராபிய உலகம் பிளவுண்டிருப்பதையும், அராபிய நாடுகளில் இஸ்லாமிய- ஏகாதிபத்திய உணர்வுகள் திரண்டு வருவதையும் அவதானித்த சதாம் இப்பிளவு பட்ட சூழ்நிலையைப் பாவித்து தனக்கு இலாபம் தேடும் முயற்சியில் குவைத்தைக் கைப்பற்றினார்.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் ஈராக்கின் இராணுவபலம் ஈரானுக்கோ, சிரியாவிற்கோ, குர்திஷ்தானுக்கோ, அன்றி பாலஸ்தீனியர்களுக்கோ எதிராக இருப்பது தான் உகந்ததேயொழிய தனது நலன் பேணும் நண்பர்களான எண்ணெய் குதங்களை அமெரிக்க, மேற்கத்தைய நாடுகளின் குத்தகைக்கு விட்ட ஷேக்குகளுக்கு எதிரானதாக இருத்தல் ஆகாது.

குவைத்தை விட்டு வெளியேறும் படி ஈராக்கை வலியுறுத்தியபோது, மத்திய கிழக்குக்கான ஒரு தீர்வு ஏற்படும் போது தான் ஈராக் குவைத்திலிருந்து வெளியேறும் என ஈராக் கூறிய கூற்று அமெரிக்காவின் இதுவரையான கொள்கைகளுக்கு பேரிடியானது.

இஸ்ரேலின் மத்தியகிழக்கு ஆக்கிரமிப்பு கொள்கைகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் 143 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருந்த போதிலும் அவை நிறைவேற்றப்படுவதை தடைசெய்வதன் மூலமும், எகிப்திற்கு பணஉதவி செய்வதன் மூலம் அராபிய ஒற்றுமையை பிளவு படுத்தி தனது அமைப்பை ஏற்படுத்தி வந்த அமெரிக்கா ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்பின் மூலம் வளைகுடாவில் மட்டுமல்ல, மத்திய கிழக்கிலும் தனது ஆர்வம் அச்சுறுத்தலுக்குள்ளானதை உணர்ந்தது.




## யுத்தத்தின் மூலம் தன் தலைமையை நிரூபிக்க அமெரிக்கா முயற்சி

இந்நிலைமையை மாற்றுவதற்கான உடனடி தீர்வு ஈராக்கின் இராணுவ பலத்தைக் குறைத்து வளை குடாவிலும், மத்திய கிழக்கிலும் தனக்கு சார்பான அரசுகளை உருவாக்குவதேயாகும். ஐக்கிய நாடுகள் சபையில் சோவியத் யூனியனின் உள்நாட்டு அரசியல் சூழ்நிலையினால் உருவான வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட பலவீனத்தைப் பாவித்து உடனடியாக ஈராக்கிற்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றியது.

பாலஸ்தீனிய, ஆப்கானிஸ்தான், சைப்பிரஸ், திபெத், மேற்கு சஹாரா போன்ற நாடுகளில் ஆக்கிரமிப்பிற்கு பின்னர் கடைப்பிடிக்கப் பட்ட பொறுமை எதனையுமே கடைப் பிடிக்காது தனது இராணுவ தலையீட்டின் மூலமாவது உலகம் முழுவதையும் தனது காலடியில் கொண்டுவரும் முயற்சியாக ஜனவரி 16ம் திகதி அமெரிக்கா போரை ஆரம்பித்தது.

மேலும் 80ம் ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் பெரிதும் பலவீனப்பட்டு ஜப்பானுக்கும், ஐரோப்பாவுக்கும் தனது சந்தைகளை இழந்து வந்த அமெரிக்கா உள்நாட்டுப் பிரச்சனைகளிலிருந்து அமெரிக்க மக்களை திசை திருப்பவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்தது. பொருளாதார ரீதியாக முதன்மை ஸ்தானத்தை இழந்த நிலையில் எதிர்காலத்தில் தனது ஆர்வங்களை உறுதிப்படுத்த இராணுவ, அரசியல் ரீதியில் உலகைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அமெரிக்காவிற்கு இப்போரின் மூலம் அவசியமானதாகும்.

80ன் இறுதியில் பனிப்போர் முடிவுக்கு வந்த நிலையில் மூன்றாம் உலக மண்டல நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு சவாலாக இருக்கும் நாடுகளையும் மாற்றியமைத்து உலகம் முழுவதும் ஒரே அமைப்பை (அமெரிக்க நலன் பேணும்) ஏற்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாக உள்ளது. உலகில் "ஒரு புதிய அமைப்பை(New order) ஏற்படுத்த இப்போர் ஆரம்பிக்கப்பட்டதென அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியது இதையே காட்டி நிற்கிறது.

அரபிய நாடுகளில் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், கடந்த பத்து, இருபது வருடங்களில் தயாரிக்கப் பட்ட நவீன ஆயுதங்களை சோதனை செய்து பார்ப்பதற்கும் இவ் யுத்தம் ஆரம்பிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களும் அமெரிக்கா எவ்வித சமரச தீர்வையும் விரும்பாது தொடர்ந்து இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது கற்பனையில் எழுந்ததல்ல எனக் கூறப்படுகின்றது.

## அமெரிக்காவின் இராணுவ வழிமுறைகள்

இராணுவ ரீதியாக அமெரிக்காவின் வழிமுறையானது ஈராக்கை சேதமாக்குவதன் மூலம் ஈராக்கிய இராணுவத்தை குவைத்தில் தனிமைப்படுத்தி பலவீனப்படுத்திய


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னர் குவைத்தைத் தாக்கி விடுதலை செய்யவேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் ஈராக்கின் சிவில் இலக்குகள் உட்பட அனைத்தும் கூட்டணிப் படைகளின் விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாகின.

குண்டு வீச்சுத் தாக்குதல்களில் ஈராக் முற்றுமுழுதாகச் சேதமாக்கப்பட்ட பின்னர், ஒருபுறம் சர்வதேச ரீதியில் அமுல்படுத்தப்பட்டு வரும் வர்த்தகத் தடையினாலும், மறுபுறம் உள்நாட்டு உற்பத்தி எதுவுமற்ற நிலையிலும், ஈராக் முற்றுமுழுதாகப் பலவீனமடைந்த நிலையில் குவைத்தினுள் தரை, கடல், ஆகாய ரீதியான தாக்குதல்களை மேற்கொண்டு இராணுவ வெற்றியீட்டுவதென அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் இரண்டாவது ஆயுதம் பிரச்சாரமாகும் முற்றுமுழுதான தணிக்கையை அறிமுகப்படுத்தி ஒருமாதகாலமாக பிரேதங்களற்ற தொழில் நுட்ப காட்சியாக உலகம் முழுவதும் இப்போரை விளம்பரப் படுத்தி வருகின்றது.

இஸ்ரேல் குழந்தைகள் விஷவாயு அணிய வேண்டிய அவலத்தை நாள் முழுவதும் காட்டியும், அதேவேளை ஈராக் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப் படுவதையும், சிவில் இலக்குகளின் அழிவுகளையும் தவிர்த்தும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

வெள்ளையரற்றவரின் உயிரின் பெறுமதியை மிகவும் கேவலமாக மதித்து வரும் மேற்கத்தைய சமூகத்தில் வளைகுடாவில் எண்ணெய்ப் படலத்தின் மூலம் இறக்கும் பறவைகளை காப்பாற்ற எடுக்கப்படும் முயற்சிகளை தொலைகாட்சியில் காட்டி தமது "மனிதாபிமானத்தைத்" தெரிவித்தனர்.

இவ் யுத்தத்தில் அமெரிக்காவின் சனத்தொகையில் 17% சதவீதமான கறுப்பர்களை 40% இற்கு மேல் போர்களத்திற்கு அனுப்பியதன் மூலம் வெள்ளையர்களின் மரண எண்ணிக்கையை குறைக்க எண்ணியுள்ளது.

அமெரிக்கா இராணுவ ரீதியாக ஈராக்கை நிர்மூலமாக்கி, அதை உலகம் முழுவதும் விளம்பரப் படுத்துவதன் மூலம் அனைத்து நாடுகளும் தனது தலைமையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதைத் தெளிவுபடுத்த முயற்சிக்கின்றது.

இதை நிறைவேற்றுவதற்காக எத்தகைய அழிப்புக்களையும் மேற்கொள்வதற்கு "ஜனநாயகத்தின் காவலனான" புஷ் தயாராகவுள்ளார்.

அராபிய நாடுகளில்

# வளைகுடா யுத்தத்தின் எதிரொலிகள்

## அராபிய நாட்டு பிரதிநிதிகளுடன் கதிர் மேற்கொண்ட கலந்துரையாடல்

எஸ்.கிறிஸ்ரி.

ஈராக்குக்கு எதிரான யுத்தம் முழு அராபிய-இஸ்லாமிய உலகத்தையும் உலுப்பியுள்ளது. அரபிய நாட்டு நகரங்களில் மக்கள் கோபம், காழ்ப்புணர்வு, வெறுப்பு, துன்பத்தை வீதியில் நாளாந்தம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். சிரியா, ஜோர்டான், லிபனான், எகிப்து, சூடான், லிபியா, அல்ஜீரியா, துனேசியா, மொரொக்கோ போன்ற நாடுகளில் தினமும் இலட்சக்கணக்கான மக்கள் ஈராக்கிய மக்களுக்கு ஆதரவாகவும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்திவருகின்றனர். மேற்கத்தைய துருப்புக்களுடன் இணைந்து ஈராக்குக்கு எதிராக 1700 துருப்புக்களை அனுப்பிய மொரொக்கோ மன்னர் ஹசன், ஆரம்பத்தில் ஊர்வலங்களைத் தடைசெய்த போதிலும் மில்லியன் கணக்கான மக்கள் வீதியில் இறங்கியவுடன் ஈராக்கிய மக்களை சகோதரர்கள் என வர்ணித்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார். சிரியாவும் தனது துருப்புக்களை சவுதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்திருந்த போதிலும், 85% சிரியமக்கள் தமது ஆதரவை ஈராக்குக்கு தெரிவித்துள்ளனர். துனேசியா, அல்ஜீரியா, மொரோக்கோ போன்ற நாடுகளில் எதிர்ப்பு ஊர்வலங்கள் அந்நாட்டு அரசாங்கங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றன.

நீண்டகாலமாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் தொடர்ந்து தமது விடுதலைக்காகப் போராடி வரும் பாலஸ்தீனியர்களைப் பொறுத்தவரை தற்சமயம் அவர்களது வெற்றி ஈராக்கினது வெற்றியிலேயே தங்கியுள்ளதாக மாறியுள்ளது. இஸ்ரேலின் மீது விழும் ஒவ்வொரு ரொக்கட் தாக்குதல்களையும் குதூகலத்துடன் ஆர்ப்பரித்து வரும் அவர்கள் தெற்கு லெபனானிலிருந்து இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்களையும் ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் துனேசியாவிற்கு விஜயம் செய்த கலாநிதி. நாஜி அல்-ஹசான் அவர்களுடனும். பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பேர்லின் பிரதிநிதி திரு. அப்துல் யூசப் உடனும், ஈராக்கிய எதிர்கட்சியான ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு. அலி இஸ்மாயில் உடனும் கதிர் மேற்கொண்ட சந்திப்பிலிருந்து...

**கதிர்:** *ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தபோது PLO அதைக் கண்டித்து வளைகுடாப் பிரச்சனைக்கு அரசியற் தீர்வை ஏற்படுத்த முடிவு செய்தது. தற்போது PLO சதாமின் பக்கம் முற்றுமுழுதாக சாய்ந்துள்ளது. எவ்வாறு இம்மாற்றம் திடீரென ஏற்பட்டது?*

**யூசப் :** PLO இன் நிலைப்பாட்டை விட வளைகுடாவின் நிலைமைகளிலேயே மாற்றம் ஏற்பட்டுள்ளன. நாங்கள் அராபிய நாடுகளுக்குள் இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு முயற்சி செய்தோம். அமெரிக்கா உட்பட வெளிநாட்டுத் துருப்புக்கள் வளைகுடாவில் பிரசன்னமாகியதும் அது சாத்தியமற்றுப் போனது. PLO எவ்விதமான இராணுவத் தீர்வையும் விரும்பியிருக்கவில்லை. யுத்தம் இப்பிராந்தியத்தில் வாழும் அனைவரையும் அழிக்கும் என்றே நாம் கருதுகின்றோம்.

**கதிர்:** *இப்பிரச்சனை ஈராக் குவைத்தினை ஆக்கிரமித்ததால் தான் உருவானது எனக் கூறுவது பற்றி உங்கள் பார்வை என்ன?*

**யூசப் :** ஈராக்கிற்கும், குவைத்திற்குமான பிரச்சனை மிகவும் பழையது. ஈராக்கியர்கள் குவைத்தை தமக்குச் சொந்தமான


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈராக்கின் இராணுவ தந்திரோபாயம்

ஈராக்கின் இராணுவ பலம் பெருமளவு அதன் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது. நவீன ஆயுத துறையில் ஏனைய நாடுகளுடன் போட்டி போடமுடியாத நிலையில் ஈராக்கைப் பொறுத்தவரையில் இப்போரில் தாக்குதல்களில் ஈடுபடுவதன் மூலம் வெற்றியீட்டுவது என்பது இயலாத காரியம். எனவே தற்காப்பு போரில் ஈடுபடுவதையே ஈராக் தனது தந்திரோபயமாகக் கொண்டுள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கு முன்னரே சதாம் குசைன் "அமெரிக்க சமூகம் 10,000 அமெரிக்க துருப்புக்கள் இப்போரில் பலியாவதையே ஏற்றுக்கொள்ள மாட்டாது" எனவும் எனவே தரை மீதான யுத்தத்தில் தனது வெற்றி சாத்தியமானது எனவும் கூறினார். 500,000 ஈராக்கியர்களை ஈரான்-ஈராக் யுத்தத்தின் போது பலி கொடுத்த சதாம் இவ் யுத்தத்திலும் இம்மக்களையே பலிகடாக்களாக்கி யுத்தம் புரிகிறது. வியட்நாம் யுத்தத்தின் போது அமெரிக்க துருப்புக்களின் சடலங்கள் நாடு திரும்பும் போது அமெரிக்காவில் ஏற்பட்ட எதிர்ப்பு அமெரிக்காவின் தோல்விக்கு வழி வகுத்தது என்பதை மனதிற் கொண்டே இவ்வழிமுறை ஈராக்கினால் வகுக்கப்பட்டது.

இஸ்ரேல், சவுதி அரேபியா மீதான ரொக்கட் தாக்குதல்கள் சதாமின் இரண்டாவது போர் தந்திர வழிமுறையாகும். அராபிய-இஸ்லாமிய மக்களையும், மூன்றாம் உலக மக்களையும் தனது பக்கம் வென்றெடுப்பதற்காகவே சதாம் இத்தாக்குதலை மேற்கொள்ளுகின்றார். அத்துடன் இஸ்ரேல் மீதான தாக்குதல் மூலம் இஸ்ரேலை போருக்கு இழுப்பதால் வளைகுடாப் பிரச்சனையை மத்திய கிழக்குப் பிரச்சனையாக மாற்றி குவைத்திற்கான தீர்வின் மூலம் பாலஸ்தீனிய பிரச்சனைக்கு தீர்வை ஏற்படுத்த உலக சமூகத்தை நிர்ப்பந்திப்பதும் இத்தாக்குதலின் ஓர் அம்சம்.

இஸ்ரேல், அமெரிக்கா ஆகியன ஒருபோதும் குவைத்-பாலஸ்தீனப் பிரச்சனையை ஒன்றிணைப்பதை ஏற்கமாட்டாதென்பதால் அரசியல் ரீதியாக சதாம் குவைத்திலிருப்பதற்கு காரணம் ஏற்படுத்திக் கொள்வதுடன்.

பிரித்தானியரால் ஹொங்கொங் போல உருவாக்கப் பட்ட, கொலனியாகவே கருதுகின்றனர். நாங்கள் பலதடவைகள், இறுதியாக 1972ல், ஈராக்கிற்கும், குவைத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு சமாதானத்தை ஏற்படுத்தினோம். இம்முறை அமெரிக்க, நேட்டோ ஆக்கிரமிப்பு துருப்புக்களின் தலையீட்டினால் இது சாத்தியமற்றதாகியுள்ளது.

நீண்ட காலமாக இஸ்ரேலிய துருப்புக்கள் பாலஸ்தீனத்தில் நிலை கொண்டிருந்து, ஐக்கிய நாடுகள் சபை வெளியேறும்படி கோரியும் இஸ்ரேல் தரப்பில் இக்கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்ட போது அமைதியாக இருந்தவர்கள் ஈராக் விடயத்தில் மட்டும் இவ்வளவு அவசரம் காட்டுவதேன்?

இங்கு மத்திய கிழக்கில் இரு விதமாக அளவுகோலுடன் அளவிடபடுகின்றது. நாங்கள் 40 வருடங்களாக மத்திய கிழக்கில் அமைதியான தீர்வு ஏற்படுவதற்கு பொறுத்துக் கொண்டிருக்கின்றோம். திடீரென 500,000 அமெரிக்கத் துருப்புக்கள் ஒரு சில மாதங்களுக்கு மேல் பொறுக்கமுடியாமல் யுத்தத்தை ஈராக்கின் மேல் ஆரம்பித்து வளைகுடா நாடுகளை அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இதன்காரணமாகவே இப்பகுதி மக்கள் சதாம் குசைனின் மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

**கதிர்:** *துனேசியாவில், இந்த யுத்தம் அங்குள்ள மக்களை வெகுவாகப் பாதித்துள்ளதாகவும், தினசரி மக்கள் வீதியில் ஊர்வலம் புரிவதாகவும் செய்திகள் கிடைக்கின்றன. எவ்வகையான தூண்டுதலின் பேரில் மக்கள் வீதியில் செல்கின்றார்கள்?*

**நாஜி:** ஐரோப்பிய, வெள்ளை மனிதன் பேராசை பிடித்த, மக்களை அடக்கியொடுக்கும் ஆக்கிரமிப்பாளனாகவே கருதப்படுகின்றான். துனேசியா சுதந்தரமடைந்து 30 வருடங்களாகின்றன. ஆயினும் இச்சுதந்தரம் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்தியதா?

உதாரணமாக காலானித்துவத்தின் போது நாட்டுக்கு ஏற்படுத்தப் பட்ட அழிவுகளுக்கு பரிகாரம் ஏதும் ஒருபோதும் மேற்கொள்ளப்படவில்லை. நாடு தொடர்ந்தும் பிரெஞ்சு மொழி பேசும் மேல்வர்க்கத்தினரால் ஆட்சி செய்யப்படுகின்றது. பலர் இவ் ஆட்சியை காலனித்துவத்தின் வேறுவடிவ தொடர்ச்சியாகவே கருதுகின்றனர்.

அவர்கள் வெள்ளையர்களை வெறுப்பதை மனோவியல் ரீதியாக விளக்கமுடியும். ஐரோப்பியர்களின் கண்களில் நாங்கள் ஒன்றில் பயங்கரவாதி, அழுக்கானவன், முட்டாள் அல்லது பத்து பெண்களை வைத்திருக்கும் பெண்ஒடுக்குமுறையாளன். முற்றுமுழுதாக அனைத்து மக்களையும் இவ்வகையாக தரம் பிரித்து அடிமைகளாகப் பாவிப்பதை தொடர்ந்தும் பொறுத்துக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

**கதிர்:** *சதாம் குசைன் நீண்ட காலமாக ஈராக்கிய எதிர்கட்சிகளை ஒடுக்கி, அழித்து ஆட்சி புரிந்துள்ளார். தற்போதைய சூழ்நிலையில் எதிர்கட்சிகளின் நிலைப்பாடு என்ன?*

**இஸ்மாயில்** : சில எதிர்க்கட்சிகள் நாடு தற்போது அந்நிய ஏகாதிபத்திய சக்திகளினால் ஆபத்துக்குள்ளாக்கப் பட்டுள்ளனதென சதாம் குசைனுக்கு ஆதரவு அளித்தும், சில இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவுடன் இணைந்து சதாம் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரவும் முயற்சி செய்கின்றன.

எம்மைப் பொறுத்தவரை நாம் ஒருபோதும் அரசாங்கங்களில் தங்கியிருக்கவில்லை. போரின் முடிவில் ஒன்றில் சதாம் பதவியில் இருப்பார் அல்லது அமெரிக்காவினதும், குவைத், சவுதியினதும் ஆதரவான அரசு ஒன்று பதவியில் அமர்த்தப்படும். இவ்விரு நிலைமைகளிலும் நாம் ஈராக்கிய மக்களுக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டி நேரிடும். ●


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அராபிய மக்களுக்கு இஸ்ரேலை தாக்குவதற்கான வல்லமை தனக்குண்டு என நிரூபித்து அராபிய தலைவராக மாறுவதற்காக வழி சமைத்துள்ளார்.

சதாமின் மூன்றாவது தந்திரோபாயம் இராணுவ ரீதியற்றதாகும். பல்லாயிரக் கணக்கான பீப்பா எண்ணெயை வளைகுடாவினுள் ஊற்றியதன் மூலம், ஈராக்கை அழிப்பதன் மூலம் யாரும் குவைத்தைப் பெற்றுவிட முடியாது என்பதைத் தெரிவித்துள்ளார். ஈராக் குவைத்தை விட்டு விரட்டியடிக்கப் படுமாயின் குவைத் எவருமே நுழையமுடியாதளவு அழிக்கப் பட்டு விடும் என்பதால் ஈராக்குடன் எந்தவொரு காலகட்டத்திலாவது பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டிய தேவை ஏற்படுமெனவும் எண்ணியுள்ளார்.

அத்துடன் சுற்றாடல் மீது தாக்குதல் ஏற்படுத்துவதன் மூலம் பொதுமக்களது போரெதிர்ப்பு உணர்ச்சிகளை ஊக்குவித்து போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவும் முயற்சி எடுத்துள்ளார்.

## கூட்டணி நாடுகள் யுத்தத்தினூடாக தமது நலன்களை பேணுவதற்கு முயற்சி

பிரித்தானியா, பிரான்சு உட்பட அனைத்து கூட்டணி நாடுகளும் போர் முடிவின் போது ஏற்படும் அமைப்பில் தம்முடைய நலன்களையும் உறுதிப்படுத்துவதற்கு ஈராக்கிய மக்கள் மீது குண்டு மாரி வீசிக் கொண்டிருக்கின்றனர். பிரித்தானியா ஐரோப்பிய சமூகத்தில் முதலாவது ஸ்தானத்தை ஜேர்மனியிடமிருந்தும், பிரான்ஸிடமிருந்தும் பெறமுடியாத நிலையில் அமெரிக்காவுடன் நெருங்கிய கூட்டை ஏற்படுத்தி உலக அரங்கில் அரசியல் வல்லமை பெற விளைகின்றது.

ஈராக்கிற்கு நீண்டகாலமாக இரசாயன ஆயுதங்களையும், நவீன தொழில் நுட்ப வசதிகளையும் வழங்கி வந்த ஜேர்மனி, தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைப் பாவித்து இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் முதற்தடவையாக தனது துருப்புக்களை ஐரோப்பாவிற்கு வெளியே அனுப்பியுள்ளது. இராணுவ ரீதியாக நேரடியாகக் கலந்து கொள்ளமுடியாததால் கூட்டணி அரசுகளுக்கும், இஸ்ரேல், சிரியா, ஜோர்தான், எகிப்து போன்ற நாடுகளுக்கும் பணமுடிச்சை அளிப்பதன் மூலம் தமது செல்வாக்கை அங்கு நிலைநாட்ட முனைகின்றது.

சோவியத் யூனியன் உள்நாட்டுப் பிரச்சனைகளுக்கு தலை கொடுக்க முடியாத நிலையிலும், பொருளாதார நெருக்கடிகளாலும், 5 வருட கால பெரஸ்ரோய்காவில் மாற்றம் ஏற்படுத்த விரும்பாமையாலும் கூட்டணியை ஆதரித்து வருகின்றது. இருப்பினும் சோவியத் தலைமையில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகவும் இப்போரில் அமெரிக்கா வெல்வது, சோவியத் நலன்களைப் பாதிக்கக் கூடும் என்பது பரவலாக மேலோங்கியுள்ளது. அண்மையில் பிறிமாகோ-சதாம், கோபார்சோ-அஸீஸ் சந்திப்பு என்பன சோவியத் யூனியன் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எடுக்கும் முயற்சிகளாகும்.

அமெரிக்கா, பிரிட்டனைப் போல இராணுவ ரீதியாகவோ, அன்றி ஜேர்மனி, ஜப்பானைப் போல பொருளாதார ரீதியாகவோ தமது நலன்களை இப்போரில் உறுதி செய்ய முயற்சிப்பது போல் ஈடுபாடுகொள்ள முடியாத சோவியத் யூனியன் அரசியல் மத்தியஸ்துவத்தின் மூலம் தனது இடத்தைப் பெற்றுக்கொள்ள முனைகின்றது.

இரண்டாம் உலகமகா யுத்தமுடிவின் பின்னர் நடைபெற்ற போஸ்டாம் மகாநாடு போல இவ் யுத்தத்தின் பின்னரும் ஒரு மகாநாடு கூட்டப்படும் எனவும் அதன் மூலம் தமது ஆதிக்கத்தை இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தலாம் என்ற அபிலாசையின் மத்தியிலேயே அராபிய மக்களின் அழிப்பு பலவித நியாயப்படுத்தல்களுடன் வளைகுடா யுத்தமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ●

## தென்னாபிரிக்காவில் நிறவெறிச்சட்டங்கள் தகர்கின்றன.



தென்னாபிரிக்காவில் ஆட்சிபுரிந்துவரும் டி கிளாக் தலைமையிலான வெள்ளையர் அரசு இம்மாதம் முதலாம் திகதி சில நிறவெறியை வலியுறுத்தும் சட்டங்களை நீக்கியுள்ளது. கறுப்பு இன மக்கள் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே வசிக்கமுடியும் என வலியுறுத்திய வதிவிடச்சட்டங்களையும் கறுப்பின மக்கள் நிலம் வாங்குவதைத் தடுத்த நிலவுரிமைச் சட்டங்களையும், அரசியல், பொருளாதார மற்றும் தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பதிவுகளில் நிறம் பிரித்துக் காட்டிய பிரிவுகளையும் நீக்கியுள்ளது.

இதேபோல் கடந்த வருடம் யூன் 19ம் திகதி வெள்ளையர்களின் பாவனைக்கென மட்டும் அனுமதிக்கப்பட்டு வந்த நூலகங்கள், நீச்சல் தடாகங்கள், பூங்காக்கள் யாவும் கறுப்பின மக்களும் பயன்படுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

20 மில்லியன் கறுப்பின மக்களின் அடிப்படை உரிமைகளை ஒடுக்கி வரும் 5 மில்லியன் வெள்ளையர்களின் நிறவெறி (Apartheid) ஆட்சிக்கு எதிராக நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சுமார் 30 வருடங்களாக நடாத்தி வரும் போராட்டத்தின் வெற்றிப் படிகளாக இது கருதப்படுகின்றது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடாத்தி வந்த ஆயுதப் போராட்டமும், நிறவெறிக் கொள்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் கடைப்பிடித்து வந்த பொருளாதாரத் தடைகளுமே இச்சட்டங்கள் தளர்ந்து வருவதற்கு காரணமாகும்.

நிறவெறிச் சட்டங்கள் நீக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் கறுப்பின மக்களுக்கு வாக்குரிமை உட்பட ஏனைய அடிப்படை உரிமைகள் இன்னமும் தடைசெய்யப் பட்டிருப்பதால் அவை நீக்கப்பட்டு, சிறைவைக்கப்பட்டுள்ள சகலரும் விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் தொடருமென அறிவித்துள்ள நெல்சன் மண்டேலா, சர்வதேச நாடுகள் தற்போது தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக நடைமுறைப்படுத்தி வரும் பொருளாதாரத் தடைகளை தொடர்ந்து விதித்து வருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிதாய் வளரும் நாடுகளில்

# பல்தேசிய நிறுவனங்களின் பக்கவிளைவுகள்...

RACE & CLASS என்ற ஆங்கில சஞ்சிகையில் (ஏப்ரல் 1990) திரு.ஏ.சிவானந்தன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் ர.சுந்தரம்.

## பின்தங்கிய நாடுகளில் பல்தேசிய நிறுவனங்கள்

பின்தங்கிய நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாடுகளின் முன்னேற்றகரமான வளர்ச்சியை நாடி பல்தேசிய நிறுவனங்களை உள்ளே வரவழைக்கின்றன என்பதிலும் பார்க்க, அங்கே தம்மையே கவிழ்த்து விடும் சக்தி படைத்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு கட்டுக்குள் வைத்துக் கொள்வதே உண்மையான நோக்கமெனக் கூறலாம்.

மிகவும் குறைவான ஊதியம், தொழிலாளர் அமைப்புகளில்லாத சுகமான நிலைமை, சிறைப்பட்ட தொழிலாளர் கூட்டம், பெண்கள், சிறுவர்களை அடிமை ஊதியங்களுடன் வேலைக்கமர்த்தும் வாய்ப்பு என பல ஆசைகாட்டும் சலுகைகளை முன்வைத்து பல் தேசிய நிறுவனங்களை உள்ளே இழுத்துக்கொள்ளும் முயற்சியில் தம்மிடையே போட்டியிட்ட வண்ணம் தம் நாட்டையே பேரம் பேசி விற்றுவிடுகின்றன இவ் அரசாங்கங்கள்.

அந்நிய மூலதனமானது தனது வரவழைப்பை ஏற்குமுன், நிபந்தனைகளாக மேற்கூறிய சலுகைகளை எதிர்பார்ப்பது மட்டுமன்றி, காலாகாலமாக பல போராட்டங்கள் இழப்புகளினூடாக உடமையாக்கப்பட்டு நாட்டின் அரசியல் சாசனங்களில் உறுதி செய்யப்பட்ட தொழிலாளர் உரிமைகள் யாவுமே, குறைந்த பட்சம் தாம் ஈடுபடப்போகும் பிரதேசங்களிலாவது ரத்து செய்யப்பட வேண்டும் என்பதில் மிகவும் காத்திரமாக உள்ளன.

அவற்றின் நிபந்தனைகளும் கோரிக்கைகளும் உட்பிரவேசத்துடன் குறைந்து போய் விடுவதில்லை. உண்மையில் உள்ளே புகுந்த பின்னரே அதிகரிக்கின்றன. அந்நாடுகளின் வரவு-செலவு திட்டம் தொடக்கம், பொருட்களின் விலைகள் என்பவற்றில் மட்டுமன்றி, நாட்டின் உள்ளக அமைப்புகளிலேயும் (infra-structure) கைவைக்கத் தொடங்கிவிடுகின்றன. இங்கே ஒரு சில உதாரணங்களாக நாட்டின் மின்வளம், நிலவளம் என்பவற்றைக் குறிப்பிடலாம். தமது தொழிலாலைகளுக்கு போதியளவு மின்சாரம் கிடைக்கவில்லையெனில், மக்கள் பாவனைக்கான மின்சாரத்தில் அதிக பங்கினை தமக்கு உறுதியாக வழங்க வேண்டும் என நிர்ப்பந்திக்கின்றன.

ஆனால் மின்வளத்தின் பற்றாக்குறையை உணர்ந்து கொண்டால், அதனை எப்படிப் பெருக்க வேண்டும் என பல அணைகள் கட்டும் திட்டங்களை முன்வைப்பதுடன், முற்பணமாக கடனையும், உதவி செய்ய தமது நிபுணர்களையும் கூடவே கொண்டு வந்து சேர்க்கின்றன. இந்த நிபுணர்களுக்கோ அணைகளை எங்கு கட்டவேண்டும் எவ்வளவு செலவில் கட்டவேண்டும் என்ற விடயங்களன்றி வேறெதுவும் தெரியாது. அவர்களது இந்த உதவியால் ஏற்படப் போகும் சமுதாயச் சீரழிவு பற்றியோ, இயற்கைச் சூழலின் அழிவைப்பற்றியோ எதுவித கவலையோ, அறிவோ, குறைபாடுகளை காதிற் போட்டுக் கொள்ளும் கருணையோ கிடையாது.

தமது நிலைமை எவ்வாறு உள்ளதென்பதை சிறிதே உணர்ந்து கொள்ள முன்னரே இப் பல் தேசிய நிறுவனங்கள் நாட்டின் பயன்தரும் நிறுவனத்தின் முக்கிய பங்கினை தம்வசமாக்கி விடுகின்றன. சாதாரண மக்களுக்கான அன்றாட அத்தியாவசிய உணவுத் தானியங்களை உற்பத்தி செய்யும் நிலங்கள் அன்னாசிப் பழம், கரும்பு போன்ற ஏற்றுமதிப் பண்டங்களை உருவாக்கும் பெருந் தோட்டங்களாகி விடுகின்றன. சாதாரணரினது பாவனைக்கான மீன்கள், பழங்கள் யாவுமே அவர்களது சாப்பாட்டுக் கோப்பையிலிருந்து பறிக்கப்பட்டு Hotel Intercontinental, Hilton, Holiday Inns களுக்கு ஓய்வு நேரக் களிப்பாட வந்து குவியும் மேற்கத்தைய சுற்றுலாப் பயணிகளுக்கான உருசிப் பண்டங்களாக மாற்றப்பட்டு விடுகின்றன. பல்தேசியக் கொம்பனிகள் வந்து சேர்ந்த காலமிருந்து கைகளில் கூடி விட்ட ஒன்றிரண்டு ரூபாய்த் தாள்களை எண்ணிப் பார்க்க முன்னரே நாட்டின் நிலவளம், மூலவளங்கள், தொழிலாளர்கள் யாவுமே ரொக்கமாக அடமானம் வைக்கப்படுகின்றன. இங்கே சித்தரிக்கப்பட்டுள்ள நிலைமை வெறும் கற்பனையோ, கடுகைப் பூசோளமாகக் காட்டும் ஏமாற்றுப் பிரச்சாரமோ இல்லை. அதற்கு இந்நிலையிலுள்ள எத்தனையோ பின்தங்கிய நாடுகளில் ஒன்றான சிறிலங்காவை உற்று நோக்கினாலேயே சான்று கிடைத்துவிடும்.

இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் ஒருபுறத்தில் இலத்திரனியல் உற்பத்தியில் கழிவுப் பகுதியில் சிறுபங்கினையும், ஆடைகள் உற்பத்தியில் ஒரு பாகத்தையும் கொண்டிருப்பினும் அந்நிய மூலதனத்தின் முக்கிய ஈடுபாடு இங்கே விவசாய உற்பத்திகளிலும், உணவு பதனிடு வதிலுமாகவே உள்ளது. அண்மைக்காலங்களில் அரிசி மற்றும் பல பாரம்பரிய விவசாய ஏற்றுமதியில் ஈடுபட்டு வந்த தாய்லாந்து இன்று அவற்றை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு வந்து சேர்ந்துள்ளது. மாறாக அன்னாசி, தக்காளி போன்ற பெருந்தோட்டச் செய்கையும் ஆடு, மாடு, கோழிகளுக்கான செயற்கைத் தீனி போன்ற விவசாயப் பண்ட உற்பத்தியும் மீன், இறால் (tunn, Shrimp) பண்ணைகளும் பிரதானமானவையாகி விட்டன.

www.tamilarangam.net

வழமையான மக்கள் பாவனையிலிருந்த மாமிச பண்டங்கள் கூட உள்நாட்டுப் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு ஏற்றுமதிக்கு மட்டுமெனாதாகவே உற்பத்தி செய்யப் படுகின்றன. இவற்றிற்கெல்லாம் ஒத்தாசையாக இருந்து உதவிகள் புரியும் தாய்லாந்து பூர்சுவாக்கள் இந்நிறுவனங்களிடமிருந்து சற்றுக் குறைவான உருசியற்ற திடீர் உணவுத் தயாரிப்புக்களையும் (குளிர் பதனமிடப்பட்ட) பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளை நன்றிக் கடனாகப் பெற்றுள்ளனர். இவ்வகையில் தாய்லாந்து மக்களுக்கு மகோன்னத உதவியை வழங்கும் பெரும் நிறுவனங்கள் ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவையாகும். தாய்லாந்து இன்று அன்னாசி, மீன், பதமாக்கப் பட்ட இறைச்சி உணவு ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் உலகில் முன்னணி வகிக்கின்றது. அதேவேளை, தாய்லாந்தோ தனது மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறது.

## பல்தேசிய நிறுவனங்களும் ஏகாதிபத்தியமும்

இதுவரைகால அனுபவத்தைக் கொண்டு பார்க்கும் போது இந்நாடுகள் தமது வேலையில்லாப்பிரச்சனையை போக்கிடவும், பின்தங்கிய நாடுகள் என்ற நிலையிலிருந்து வளர்ந்து வரும் நாடு என்ற பட்டியலுள் பாய்வதற்குமாக எடுத்துக் கொண்டுள்ள முயற்சி இவற்றை காலாகாலத்துள், படிப்படியாக கீழே வழுகிச் செல்லும் மட்டுப்பட்ட வளர்ச்சிக்கும், வித்தியாசமான வேலையில்லாப் பிரச்சனைக்கும் இட்டுச் செலலும் நிச்சயமற்ற வழியையே சமைத்துள்ளன எனக் கூறமுடியும். சாதாரணமான விவசாயிகள் தமது நிலங்களிலேயே போககாலக் கூலிகளாகவும், நாட்டுப்புற தொழிலாளர்கள் நகர்புறங்களுக்கு ஈர்க்கப்பட்டு திடமற்ற பொருளாதாரத்தில் தற்காலிக ஊதியம் பெறும் தொழிலாளர் கூட்டங்களாகவும், பெண்கள் கழிவு இலத்திரனியல் தொழிலாலைகளில் தற்காலிக குறைவிலைக் கூலிகளாகவும் மாற்றப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அதேவேளை, இந்நாடுகளிடையோன வளர்ச்சிக்கான போட்டியும், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதாரங்களும் மேலும் மேலும் இந்நாடுகளை பல்தேசிய நிறுவனங்களுக்கு பணயங்களாக்குவதுடன், IMF இன் கட்டுப்பாட்டிற்கும், உலக வங்கியினது பூகோள பொருளாதார திட்டத்தின் வடிவமைப்புள் இட்டுச் சென்று நாட்டினை செயலற்று விடவே செய்கின்றன. இவ்வாறு நிலைமையை ஊர்ஜிதம் செய்வதற்கு என்றென்றும் உறுதியாக காத்திரமளிப்பது அமெரிக்க ஏகாதிபத்தியமாகும்.

இவ்வகையில் 3ம் உலகநாடுகளை சூறையாடுவதற்கு ஏதுவாக மேற்கத்திய நாடுகள் ஏற்படுத்தும் பிரதான உத்தி இந்நாடுகளிலெல்லாம் சர்வாதிகார அரசுகளையும் ஆட்சியில் அமர்த்தி அதிலேயே வைத்திருக்க உதவுவதுமாகும்.

மூலதனமானது இன்று நாட்டு எல்லைகளை அத்துமீறி விட்டது. அதற்கு தொழில் நுட்பத்துறை வளர்ச்சி உதவியாக அமைந்துள்ளது. ஆகவே மூலதனம் செல்லுமிடமெல்லாம் அது சார்ந்த நாடுகளும் புகுந்து ஒத்தாசை செய்யவேண்டியுள்ளதால், புகுந்த இடங்களில் மூலதனம் ஆதாயத்துடனும் பாதுகாப்புடனும் இயங்குவதற்கேற்ப அவ்வவ்விடங்களில் அரசியல்-சமூக ஒழுங்குகளை நிலைநாட்ட வேண்டியதாகிவிடுகின்றது. இங்கே தேவையான இடங்களில் வன்முறையும், பொதுவாக எல்லா இடங்களிலும் கலாச்சாரத் திணிப்பும் உபகரணங்களாக கையாளப்படுகின்றன.

## கலாச்சாரத் திணிப்பு

இன்றைய கலாச்சாரத் திணிப்பு , காலம் கடந்து விட்ட பிரித்தானிய பாணியிலமைந்த பொதுப்பட்ட மேதாவிலாசமுடையபிரச்சாரத்தினூடாகவோ, கல்வி ஊடகங்களினூடாகவோ அன்றி மறைமுகமான மக்களை ஈர்க்கும் வகையிலான விதத்தில் நடாத்தப்படுகின்றன. சாப்பிடும் உணவுகளூடாக, போட்டுக்கொள்ளும் உடைகளூடாக, கேட்டுரசிக்கும் இசையினூடாக, பார்க்கும் தொலைகாட்சியினூடாக, வாசிக்கும் பத்திரிகைகள்-சஞ்சிகைகளினூடாக அவை 3ம் உலக நாட்டவரை வந்தடைகின்றன.

உலகளாவிய பொது உணவான hamburger ஐ உண்பவர்கள் கூடவே அமெரிக்காவினது வாழ்க்கை முறைகளையும் உட்கொள்ளாது போய்விடமுடியாது. பார்க்கும் தொலைகாட்சி நிகழ்ச்சியினூடாக (3ம் உலக நாடுகளில் ஏகப்பட்டவை அமெரிக்கத் தயாரிப்புக்கள்) அமெரிக்காது உலகப்பார்வையை, வாழ்க்கைப் பார்வையை சிறிது சிறிதாக ஏற்றுக் கொள்வதை தவிர்க்க முடியாது. கேட்டு மகிழும் பொப் இசைகளினூடாக காலப்போக்கில் ஒவ்வொருவரும் பிறகுரல்களை கேட்கும் இயல்பை, சிந்தனை செய்து சீர்செய்து கொள்ளும் இயல்பை, இழக்காதிருக்க முடியாது. படிக்கும் பத்திரிகை-சஞ்சிகைகளினூடாக உண்மைகளைப் பிரித்துப்பார்த்து உணர்ந்திடும் பகுத்தறிவை சிறிதுசிறிதாக இழந்திடுவதும் எதிர்பார்க்கக் கூடியதே.

இது மட்டுமா? மேற்கத்திய ஏகாதிபத்தியம் வெறுமனே தமது கலாச்சாரத்தை எம்மீது திணிப்பதுடன் நின்றுவிடுவதில்லை. அது உல்லாச பயணிகள் என்ற பெயரில் எங்கள் நாடுகளுக்கும், வீட்டு வாசல்களுக்கும் வருகை தரும். உல்லாசத்துறை என்பது வெறும் பயணம் என்பதல்ல. அது எங்கள் வாசஸ்தலம் வரும் போது தமது நாடுகளின் கலாச்சாரத்தில் வியாபித்த சீரழிந்த மிகைப்படுத்தல்களையும், எமது நாடுகளில் தான் தேர்ந்தெடுத்த எமது கலாச்சார அம்சங்களையும் கொண்டிருக்கும். எனவே, சிறிலங்காவின் கடற்கரைகள் பாலியல் உறவிற்கு சிறுர்களை பிடிக்கக் கூடிய நல்ல இடம் என்ற விளம்பரம் பிரித்தானியவிலும் மற்ற இடங்களிலும் வெளிவரும். புனிதத்தன்மை கொண்ட சன்னியாசிகள் கொண்ட இந்திய சுவாமிகள் வியாபார நிறுவனங்களாக மாற்றப்படும்.

உல்லாசப் பயணம் மனிதர்களிடையே உள்ள உறவுகளை வியாபார உறவுகளாகவும், பிரயோகமான மதிப்பான விடயங்களை மாற்றீடு செய்து வாங்கும் பண்டங்களாகவும் மாற்றுகிறது. இதன்போது இனவாதங்களின் இறுதியான கெட்டிப்பிடிகளை மறைவுக்குக் கொண்டுவர அது உதவுகின்ற போதிலும், மாற்றாக அதனிடத்தில் பூர்சுவாக் கலாச்சாரத்தையாவது நிரப்பாது, post-bourgeois nihilism தனையே முன்வைக்கிறது.

## வன்முறையும் போரும்

இப்படியாக கலாச்சாரத் திணிப்பினூடாகயும், தாம் ஆட்சியிலமர்த்திய சர்வதிகார அரசுகளின் உதவியுடன் மக்களை கொத்தடிமைத் தனத்திற்கு இழுத்துச் செல்ல முடியாத பட்சத்தில் ... இருக்கவே இருக்கிறது வன்முறை, போர். இவை நேரடியாக அமையவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் நேரடிப் போர் என்ற ஈடுபாடும் வசதிப்பட்ட இடங்களிலிருக்கும் (உ+ம்: கிரனெடா) எனினும் பொதுவாக குறைந்தளவிலான போர்முறை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(Low Intensity Warfare or Conflict- LIC) என்பதே புரட்சி அமைப்புக்கள் உருப்பெறுவதற்கு தடைகளாகவும், எதிரணிகளை (resistance) சிதைப்பதற்கும் உத்தியாக முடுக்கப்படுகின்றது. 1985ல் LIC பற்றிய நோக்கங்களை ஐக்கிய அமெரிக்கப் படைகளது இணைச் செயலகம் பின்வருமாறு முன்மொழிந்துள்ளது: "கிளர்ச்சி-எதிர்கிளர்ச்சி, பயங்கரவாதம்- எதிர்ப்பயங்கரவாதம், மனோவியல் போர்முறை, தேவையான வேளைகளில் சாதாரண படைகளின் ஈடுபாடுகள்."

LIC இனுடைய திட்டங்களில் ஒருபுறத்தில் சிறியபோர்கள், வன்முறைகளுடாக போராடும் மக்களது தைரியத்தை, திடத்தை, ஓர்மத்தை உடைப்பதற்காக முயற்சி எடுக்கப்படுகிறது. அடுத்த கட்டத்தில் அது கடும் போராக, பயங்கரவாதம்-எதிர்ப் பயங்கரவாதம், ஆயுதப்படைகள் கொண்டதாக இடம்பெறுகிறது.

எல்சல்வடோரில் சில காலங்களில் LIC இனுடைய முக்கிய அம்சமாக மனோவியல் போர்முறை கருதப்பட்டு இயக்கப்பட்டது. PSYOP (Psychological Operations) விற்பனை செய்யும் வியாபார நுட்பங்கள் அணுகுமுறைகளுடன் Institute for Popular Education இனுடைய ( இது சி.ஐ.ஏ இனால் கலாச்சார-தொடர்புசாதன அமைச்சுகளுடாக உருவாக்கப்பட்டது.) கெட்டித்தனமான தேர்ந்தெடுத்த பொய்ப்பிரச்சாரங்களும் இணைக்கப்பட்டு செயலாக்கப்பட்டது. இதன்போது சோமானிகள், பலவர்ண பிரச்சாரத்துண்டுகள், இனிப்புகள், பாட்டுக்கச்சேரிக் குழுக்கள் சகிதம் ஊர்ஊராக நுழைந்து சிறுவர்களூடாக பெரியவர்களை அணுகி விளம்பர வியடயங்களை கவனித்துக் கொண்ட அதே வேளை அரச இராணுவ பிரச்சாரமும் கூடவே முன்வைக்கப்பட்டது. இதேசமயம் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் யாவற்றிலும் மிகவும் அழுத்தமான இடைவிடா பிரச்சாரமும் கெரில்லாக்களுக்கு எதிராகவும் அரசபடைகளுக்கு சாதகமாகவும் நடத்தப்பட்டன. மறுபுறத்தில் எல்சல்வடோரின் மதிப்பை உலகளவில் உயர்த்திடவும் ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் தொடர்ந்தும் பணம் கொடுக்கும் வகையில் வாக்களித்திட வைக்கவும் உலகளாவிய பிரச்சாரமும் இதேவேளை நடாத்தப்பட்டது.

நிக்காராகுவாவில் PSYOP CIA வழிகாட்டும் குறிப்புகள் (manuals) மக்களது அரசின் நிலைப்பாட்டை மாற்றும் வகையில் எவ்வாறு சமூக அரசியல் நடவடிக்கைகளையும் வன்முறையையும் இணைத்திட செயலாக்க வேண்டும் என்று கூறுகிறது.

இவ்வாறு எதிர்புரட்சி நடவடிக்கைகளை முற்கூட்டியே நடத்துவதுடன், LIC தமக்கு இசைவற்ற 3ம் உலக நாடுகளை சீர்குலைக்கும் முயற்சியையும் தனது நேர்க்காகக் கொணடியங்குகிறது. "பொருளாதார, ராஜாங்க, இராணுவ உதவிகளை வழங்கி எதிரி அரசாங்களுக்கு எதிரான கிளர்ச்சியை நடத்துபவர்களுக்கு வெற்றி பெற்றுத் தருவது LIC இனுடைய நோக்கமாகக் கொள்ளப்பட்டு UNITA (அங்கோலா), MNR (மொசாம்பிக்), Contras (நிக்காராகுவா) போன்ற எதிர்ப்புரட்சி அணிகள் வளர்க்கப்பட்டன. நிக்காராகுவாவில் LIC இனது நடவடிக்கைகளில் அந்நாட்டின் துறைமுகங்களில் கண்ணி வெடி விதைத்து கப்பற் போக்குவரத்தை சீர்குலைத்ததும், எண்ணைக் குதம், எண்ணைச் சுத்திகரிப்பு ஆலைகளை உடைத்தெறிந்ததும் அடங்கும். 83ல் LIC உலக வங்கியிடனும் இணைந்து நிக்கரகுவா மீன்பிடி அபிவிருத்திக்காக கேட்டிருந்த கடனைப் பெறமுடியாது செய்தது. அதற்காக அரசியல் சார்பற்ற அமைப்பு எனக்கூறப்படும் உலக வங்கி கூறிய காரணம் அபிவிருத்திக்கான எண்ணை நிக்கரகுவாவிடம் இல்லை என்பதேயாகும் - ஆலைகளும் குதங்களும் சிறிது முன்னரே உடைக்கப்பட்டன.

## முன்னணிக்கு வரும் ஆயுத வியாபாரம்

இப்படியான கிளர்ச்சிகளும் எதிர்கிளர்ச்சிகளும் மேற்கு நாடுகளின் ஆயுத தளபாட வியாபாரத்திற்கு உதவியாக அமைகின்றன. போர்களைத் தூண்டிவிடுவது ஆயுத வியாபாரத்தினை மேற்கு நாடுகளில் தக்கவைக்கின்றன. "இப்படியான ஆயுத தளபாட வியாபாரம் நடைபெறாது போகின், வளரும் நாடுகள் தமது தொழிற்துறையினை கொண்டு நடத்த முடியாது. அதனால் வேலையில்லாப்பிரச்சனையும் பொருளாதார அழிவுமே இந்நாடுகளில் ஏற்படும். அதைவிட எம்மை நாம் குறைந்த விலையில் திறமையான ஆயுதங்களால் உறுதி செய்திட இவ்வியாபாரம் அவசியம்." என்று Torm Gervasi (இராணுவ ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குனர்) தொலைக்காட்சியில் மிகவும் சுயமாகவே கூறுவது பலரது சந்தேகங்களையும் இலகுவில் போக்கிவிடும்.

LIC இனுடைய அடிப்படை நோக்கம் பலதேசிய நிறுவனங்களுக்கு வியாபாரத்திற்கும், மூலதன ஈடுபாட்டிற்குமான சுவாத்தியத்தை ஏற்படுத்தி நிலைநிறுத்துவதாகும். இதனை Colmel Motley "மூலவளங்கள் நிறைந்த கேந்திர ஸ்தானங்களில் அமைந்த 3ம் அணிப் பிராந்தியங்களது அரசியல்-இராணுவ விளைவுகளையும் எதிர்காலத்தையும் கையுள் வைத்திருப்பதே நோக்கம்" என Military Review இல் விளக்கம் தரும்போது புரிந்து கொள்ளலாம். இந்த அரசியல் இராணுவ விளைவானது சிலேயில் காட்டுமிராண்டிதனமான இராணுவ அரசு தொடக்கம் குழப்பம் கொண்ட பொலிவியன் இராணுவ அரசுவரை தென் அமெரிக்காவில் வியாபித்து நிற்கிறது.

தென் கிழக்கு ஆசியாவில் அது பலவிதமான சர்வாதிகார அரசுகளாக உருவெடுத்துள்ளன. தென் கொரியா, பிலிப்பைன்ஸ் (அண்மைவரை) சர்வாதிகாரங்கள் தொடக்கம் பாராளுமன்றம் என்றபோர்வையில் அதிகாரம் (oligarchiers) வைத்துள்ள சிங்கப்பூர், சிறிலங்கா வரை அது பரவலானதாகக் காணப்படுகிறது. ஆனால் அண்மைக்காலங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம் சில சர்வாதிகார நாடுகள் நேசகரமான ஜனநாயக நாடுகளாக மாறுவதை ஏற்றுக் கொள்வதாகக் காட்டுகின்றது.

● *முற்றிற்று.*

"கதிர்" வாசகர்களிடமிருந்தும், படைப்பாளிகளிடமிருந்தும் ஆக்கங்களை வரவேற்கிறது. கதிர் தொடர்பான விமர்சனங்களையும் அது எதிர் பார்க்கின்றது. உங்கள் கருத்துக்களிலிருந்து கதிர் தன்னைச் செழுமைப் படுத்திக் கொள்ள தயாராகவுள்ளது.


*முகவரி:*

*KATHIR*
*POSTFACH 610494*
*1000 BERLIN 61*
*GERMANY*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலக்கைத் தொலைத்து

அழகேசனும்
அந்தோனியும்
அக்கரையில் அமைதி காண
அலாவுதீனோ
கொழும்பு குப்பியாவத்தையில்..

ஈழமெங்கும்
எரிமலை பிழம்புகள்
பிட்டும் தேங்காய் பூவும்
போர் பிரகடனம் செய்ய
அடுப்பு மட்டும் அமைதியாக
நெருப்பைத் தாலாட்டும்
நீறு பூத்திருக்கும்.

போராட்டத்திற்காக
புறப்பட்ட
என் இனிய நண்பா
புல்டோசரைக் கொண்டு
பூஞ்சோலையைக் கசக்கி
மயானத்துக்கல்லவா நீ
மதில் கட்டுகிறாய்.

நீ
சுதந்தரத்திற்காக தானே
துப்பாக்கி தூக்கினாய்
இருக்கும் சுதந்தரத்தையும்
ஏன் துடைத்துக் கொள்ள
துடிக்கிறாய்.

புத்தளமும், வேக்கந்தையும்
அரசபடுகொலைகள்.
மஸிகைக்காடும், காத்தான் குடியும்
எதற்காக.

நீ வீரனென்பதை
உலகத்தில் பொறித்தாய்
விவேகத்தை மட்டும்
ஏன் தொலைத்து விட்டாய்.

மொழியால் இணைந்து
மதத்தால் பிரிந்து
மனிதம் தலைகவிழ
நீ ஏன் கருவியாகிறாய்

கொஞ்சம் சிந்திக்கப் பழகு
தொலைந்து போன இலக்கை
தேடி எடு.

கடுக்கன் போட்டவனா?
குல்லா அணிந்தவனா?
பொட்டு வைத்தவளா?
முக்காடு போட்டவளா?
நமக்குள் ஏன்பிரிவினை.

நாம் அடம்பன் கொடிகள்
ஒன்றாய் திரள்வோம்.

— பொதிகை அமுதன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்